தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

வலுவிழக்கிறது "மாதி' புயல்




வங்கக் கடலில் உருவாகியுள்ள "மாதி' புயல் வலுவிழந்து வருவதாக என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: மாதி புயல் இப்போது சென்னையில் இருந்து தென்கிழக்கே 490 கி.மீ. தூரத்தில் உள்ள நிலையில் திடீரென வலுவிழக்கத் தொடங்கி உள்ளது. இது திங்கள்கிழமை தென்மேற்கு திசையை நோக்கி நகர வாய்ப்புள்ளது. இதன் காரணமாக மாதி புயல் மேலும் வலுவிழக்கலாம் என வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் தமிழகம், புதுவை, ஆந்திர கடலோர மாவட்டங்களில் மேலும் ஓரிரு நாள்களுக்கு மழை தொடரும்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை: புயல் காரணமாக தமிழகம் மற்றும் புதுவை கடற்பகுதியில் மணிக்கு 45 - 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசும். இதனால் தமிழகம் மற்றும் புதுவை கடல்பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள்

எச்சரிக்கையுடன் கடலுக்குள் செல்ல வேண்டும் எனவும் ஆழ்கடலுக்குள் செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். வானிலை முன்னறிவிப்பு: சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்யும். தரைக்காற்று பலமாக வீசும் இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேர நிலவரப்படி எண்ணூரில் 30 மி.மீ. மழையும், சென்னை நுங்கம்பாக்கத்தில் 20 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. மகாபலிபுரம், சென்னை விமான நிலையம், செங்குன்றம் ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் சேர டிச. 15 கடைசி நாள்**

வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர டிச. 15 கடைசி தேதி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து பயிர்க் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் தெரிவித்திருப்பது:

வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்துக்குச் செலுத்த வேண்டிய மொத்த பிரீமிய தொகையில் மானியம் போக கடன் பெறாத விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 116-ம், கடன் பெறும் விவசாயிகள் ரூ. 129-ம் பிரீமியமாக செலுத்த வேண்டும். இதற்கான கடைசி நாள் கடன் பெறாத விவசாயிகளுக்கு டிச. 15-ம் தேதி, கடன் பெறும் விவசாயிகளுக்கு டிச. 31-ம் தேதி. இதுவரை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேராத விவசாயிகள் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்திலோ அல்லது தங்கள் பகுதி தேசிய வங்கிகளிலோ விண்ணப்பங்களைக் கொடுத்து இத்திட்டத்தில் சேர்ந்துகொள்ளலாம். இந்தத் திட்டத்தில் கடந்த ஆண்டு பங்கேற்ற விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகை 19 வருவாய் சரகத்துக்கு உள்பட்ட 71,495 விவசாயிகளுக்கு ரூ. 18.96 கோடி வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு முதல் தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்துக்குப் பதிலாக திருந்திய வேளாண் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மேலும், விவரங்களுக்கு 94437 80661 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ..69 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.69 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய்கள் ஏலம் போனது.

இக்கூட்டுறவுச்சங்கத்தில் வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்று வருகிறது. சனிக்கிழமை நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் இருந்து விவசாயிகள், ஆயிரத்து 995 மூட்டைகளில், 98 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.70 முதல் ரூ.73.25 காசு வரையும் விற்பனையானது.

2-ம் தரம் கொப்பரைதேங்காய் கிலோவுக்கு ரூ.39.35 காசு முதல் ரூ.69.25 காசு வரையும் ஏலம் போனது. மொத்தம் ரூ.69 லட்சம் ரூபாய்க்கு தேங்காய்கள் ஏலம் மூலம் விற்பனையாகின.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 65.95 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரபடி 65.95 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,455 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கன அடி நீரும், வாய்க்காலில் 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 9.39 டி.எம்.சி.

**வேளாண் விளைபொருள்களை மத்திய அரசே கொள்முதல் செய்யும்**

வேளாண் விளைபொருள்களுக்கு வியாபாரிகள் விருப்பம்போல் விலை நிர்ணயித்து ஏமாற்றுவது இனி நடக்காது. மத்திய அரசே நேரடியாக உரிய விலை கொடுத்து விவசாயிகளிடம் பொருள்களை கொள்முதல் செய்யத் தயாராக உள்ளது என, மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணை அமைச்சர் இ.எம். சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

மதுரை வேளாண் கல்லூரி வளாகத்தில், இந்திய தொழில் கூட்டமைப்பின் மதுரை மண்டலக் கிளையும், வேளாண் கல்லூரியும் இணைந்து நடத்திய விவசாயத் திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது:

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், விவசாய விளைபொருள்களை நேரடியாக கொள்முதல் செய்யவும், பொது விநியோக மையங்களை ஏற்படுத்தவும், பொருள்களை கெடாத அளவில் பாதுகாப்பாக இருப்பு வைத்து, உலக அளவில் சந்தைப்படுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, ரூ. 1.20 லட்சம் கோடி மத்திய அரசு ஒதுக்கீடு செய்து, பணிகளை செய்து வருகிறது.

இந்தத் தொகை, பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதயைக் காட்டிலும் அதிகமாக உள்ளதால், விரயம் செய்வதுபோல் பலரும் வியப்பு தெரிவிக்கின்றனர். இந்த பணம் வீணாகிவிடக்கூடாது என, தொழில் துறையினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இது சாதாரண திட்டமல்ல. 2050 இல் உணவு மற்றும் குடிநீர்த் தட்டுப்பாடு உலகில் ஏற்படும் என நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இந்த சட்டம் முழுமையாக நிறைவேறும்போது, உலக நாடுகளுக்கு உணவுப் பொருள் விநியோகிக்கும் முக்கிய நாடுகளில் இந்தியா முன்னிலையில் இருக்கும். இதற்காக, ஆசிய நாடுகளையும் ஒருங்கிணைத்து திட்டமிட்டு வருகிறோம்.

தொழில் வணிகர்களாக இருந்தால், தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு அவர்களே உரிய விலை நிர்ணயித்து, சந்தைப்படுத்திக் கொள்வார்கள். விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் பொருள்களை விற்க வியாபாரிகளையே நம்பியுள்ளனர். வியாபாரிகள் தங்கள் விருப்பம்போல் விலை நிர்ணயிப்பதால், விவசாயிகள் ஏமாற்றப்படும் நிலையே உள்ளது.

இனி அம்மாதிரி நடக்காது. உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசே உரிய விலை நிர்ணயித்து, தானியங்களை கொள்முதல் செய்யத் தயாராகி வருகிறது. விளைநிலங்களில் இருந்தே அவற்றை சேமிப்பு கிடங்குகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான பணியில் கனரக வாகனங்கள் மட்டுமில்லாது, குதிரை, கழுதை போன்ற பிராணிகளையும் ஈடுபடுத்த உள்ளோம். பொது நியோக மையங்கள் அனைத்தும் கணினி மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, அவற்றின் அன்றாட நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட உள்ளன.

ஆசிய நாடுகள் இடையே உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு வசதியாக புதிய சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

சிஐஐ தென்மண்டல துணைத் தலைவர் நவாஸ் மீரான்: ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது, அதை சந்தைப்படுத்துவதற்கு வசதியாக ஒரு பெயரிட வேண்டும். சாதாரண விவசாயிகளாக இருந்து பொருள்களை குறிப்பிட்ட பெயரில் சந்தைப்படுத்தி, பெரிய நிறுவனங்களாக வளர்ந்த பலர் உள்ளனர்.

தமிழகத்தில் வாழைப்பழ உற்பத்தி அதிகம் உள்ளது. இதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தொழில்ரீதியாக உதவி செய்ய இந்திய தொழில்கூட்டமைப்பு தயாராக உள்ளது என்றார்.

நிகழ்ச்சியில், சிறந்த அரங்குகளுக்கு அமைச்சர் பரிசுகளை வழங்கினார். சிஐஐ மதுரை மண்டலத் தலைலவர் ஏ. கதிர்காமநாதன் வரவேற்றார். துணைத் தலைவர் டாக்டர் ரோகிணி ஸ்ரீதர் நன்றி கூறினார்.

**திராட்சை விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி**

காமாட்சிபுரத்தில் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம், தேனி நபார்டு வங்கி ஆகியவற்றின் சார்பில் திராட்சை விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையத்தில் நடைபெற்ற பயிற்சி மற்றும் கருத்தரங்கிற்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் சொக்கர் செல்வம் முன்னிலை வகித்தார்.

நுண்ணூட்டச் சத்து உரத்தின் அவசியம் மற்றும் பயன்பாடு, மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மை

அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர்கள் விஜயமுருகன், ஆ. சந்திரசேகரன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.

முன்னதாக, காமயகவுண்டன்பட்டி பிரஜ்ஜா குளிப்பான தயாரிப்பு தொழிற்சாலையில், திராட்சையில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு குறித்து தொழிற்சாலை இயக்குநர்கள் எம். ராஜா, ஆர். பிரகாஷ் ஆகியோர் விளக்கம் அளித்தனர். ஓடைப்பட்டியில் திராட்சையில் டாக்ரிட்ஜ் வேர் குச்சி ஒட்டுக் கட்டுதல் குறித்து சத்யாநகர் திராட்சை தோட்ட உழவர் மன்ற செயலர் வெங்கடேசன் செயல் விளக்கப் பயிற்சி அளித்தார்.பயிற்சி ஏற்பாடுகளை வேளாண்மை அறிவியல் மைய திட்ட உதவியாளர் சி. சுருளி ஆண்டவர், தொழில் நுட்ப வல்லுநர்கள் எஸ். ஜோதிலிங்கம், கார்த்திகேயன் ஆகியோர் செய்திருந்தனர்.

**கோமாரி நோயைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கைகள்: தமிழக அரசு தகவல்**

கோமாரி நோயைக் கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. மேலும், தற்போது இந்த நோயால் கால்நடைகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் கூறியுள்ளது.

தமிழகத்தில் கோமாரி நோய் பாதிப்பால் கால்நடைகள் இறந்ததாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இந்த நிலையில், நோய் பாதிப்பு குறித்து கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா தலைமையில் அண்மையில் ஆய்வுக் கூட்டம்

நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கால்நடை பரமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர்கள் கலந்துகொண்டனர்.

பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்ட கோமாரி நோயின் தடுப்பு நடவடிக்கைகள், உயிர் பாதுகாப்பு முறைகள், சிகிச்சை அளிக்கப்பட்ட விவரம், கால்நடைகளை பிற இடங்களுக்கு வாகனங்களிலோ அல்லது கால்நடையாகவோ கொண்டு செல்வது, கால்நடை சந்தைகளை மீண்டும் செயல்பட வைப்பது உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த நோயின் தாக்கம் அதிகளவில் காணப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், வேலூர், புதுக்கோட்டை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கோரிமாரி நோயின் தாக்கம் இப்போது இல்லை என்று அமைச்சர் சின்னையா தெரிவித்தார். மேலும், நோயைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் கால்நடைகளுக்கு தற்போது பாதிப்பு ஏதும் இல்லை என்றும் கோமாரி நோய் தமிழகத்தில் இப்போது முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூட்டத்தில் அவர் கூறினார்.

ஆறாவது சுற்று தடுப்பூசி: அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அனைத்து கால்நடைகளுக்கும் ஆறாவது சுற்றாக தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது. இதற்கென பிரத்யேக செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட வேண்டும் என அனைத்து மண்டல இணை இயக்குநர்களுக்கும் தமிழக அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

**சர்க்கரை ஆலையில் இயந்திரக் கோளாறு சீரமைப்புப் பணி தீவிரம்**

வேலூரை அடுத்துள்ள அம்முண்டி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வெள்ளிக்கிழமை தொடங்கிய கரும்பு அரவை பணி இயந்திர கோளாறு காரணமாக மாலையில் நிறுத்தப்பட்டது.

இதையடுத்து ஆலைக்கு கரும்பு ஏற்றி வந்த லாரிகள் 70-க்கும் மேற்பட்டவை சனிக்கிழமை இரவு வரை ஆலை அருகே நீண்ட வரிசையில் காத்திருந்தன.

இயந்திர கோளாறை சீர்செய்யும் பணி சனிக்கிழமை இரவுக்குள் நிறைவு பெற்றுவிடும், அதையடுத்து உடனடியாக அரவை பணி தொடங்கப்படும். காத்திருக்கும் லாரிகளில் உள்ள கரும்புகள் சில மணி நேரத்தில் அரவைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கூட்டுறவு ஆலை சங்கத்தின் தலைவர் ஏ.குமார் தெரிவித்தார்.

சர்க்கரை ஆலையில் 2013-14-ம் ஆண்டுக்கான கரும்பு அரவை பணி வெள்ளிக்கிழமை காலை தொடங்கியது. நாள் ஒன்றுக்கு 2500 டன் அரவை திறன் கொண்ட பழைய இயந்திரம் உள்ளது. இதை சீரமைத்து ஆலை அரவையை இயக்கிய நிலையில் மாலையில் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை அடுத்து அரவை நிறுத்தப்பட்டது.

உடனடியாக இதை சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டது. சனிக்கிழமை இரவு இப்பணி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ.140 கோடியில் புதிய இயந்திரம் சர்க்கரை ஆலைக்கு ரூ.140 கோடியில் புதிய இயந்திரம் நிறுவப்பட்டு வருகிறது. இதில் பரிட்சார்த்த முறையில் வரும் ஆண்டு ஏப்ரலில் அரவை செய்வதற்கும் ஆலை நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு அக்டோபரில் இருந்து புதிய இயந்திரத்தில் அரவை பணி தொடங்கும் என்று குமார் தகவல் தெரிவித்தார்.

**தாராபுரம் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் ஆய்வு**

தாராபுரம் நகர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்களில் அதிகாரிகள் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

ஈரோடு விதைச் சான்று உதவி இயக்குநர் வி.சி.மகாதேவன் தலைமையில், விதைச் சான்று அலுவலர்கள் பி.ஏ.மாரிமுத்து, பி. பொம்மராஜ், எம். ராஜாராம், கே.ஆர்.சுப்பிரமணியன் உள்பட 8 அலுவலர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

இதில், விதை சுத்திகரிப்பு நிலைய உரிமம், விற்பனை உரிமம், சுத்தம் செய்த விதை குவியல்களின் தரம் மற்றும் மிதவைச் சோதனை போன்றவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் தரமானச் சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் என விதை சுத்திகரிப்பு நிலைய

உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.ஆய்வுக்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய உதவி இயக்குநர் வி.சி.மகாதேவன் கூறியது:

தரமற்ற விதைகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நெல் விதைகள் மட்டுமல்லாது ஏனைய பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்வற்றிலும் சான்று விதைகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க உற்பத்தியாளர்களுக்கு அறிவுறுத்தி உள்ளோம் என்றார்.

**பனங்காளி மஞ்சள் குவிண்டால் ரூ.10555-க்கு விற்பனை**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்தது.

இந்தச் சங்கத்துக்கு 1120 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

விவசாயிகள் கொண்டு வந்த மஞ்சளைக் கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 30-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர்.ஏலம் மூலம் சுமார் ரூ.50 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ. 6200 முதல் ரூ.7209 வரையும், கிழங்கு ரகம் ரூ. 4800 முதல் ரூ.5800 வரையும், பனங்காளி ரகம் ரூ.8000 முதல் ரூ.10555 வரையும் விற்பனையானது. மற்ற சந்தைகளைவிட குவிண்டாலுக்கு ரூ. 900 முதல் ரூ.1000 வரை அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். விவசாயிகளுக்கு பணம அன்றே பட்டுவாடா செய்யப்பட்டது. இதை சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**சவுக்கு மர மகசூல் கணக்கிட புதிய சாப்ட்வேர் அறிமுகம் : வன மரபியல் நிறுவனம் சாதனை**

கோவை:கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில், சவுக்கு மர மகசூலை துல்லியமாக கணக்கிடும் "சாப்ட்வேர்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சவுக்கு மரங்கள் பயிடும் விவசாயிகள், அறுவடைக்காலத்தில் மகசூலின் அளவை துல்லியமாக கணக்கிட முடியவில்லை. இதனால், விவசாயிகளுக்கு பலத்த நஷ்டம் ஏற்படுகிறது. கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில், சவுக்கு மர மகசூலை துல்லியமாக கணக்கிடும் "சாப்ட்வேர்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை கண்டுபிடித்த வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் விஞ்ஞானி புவனேஸ்வரன் கூறியதாவது: சவுக்கு பன்முகப்பயன்பாடு கொண்ட மரம். காகிதக் கூழ் மற்றும் கட்டுமான பணிகளுக்கு அதிக அளவு பயன்படுத்தப்படுகிறது. இதனால், தமிழகத்தில் சவுக்கு மரம் பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருகிறது. சவுக்கு மரம் அறுவடைக்கு தயாரான பின், அவை எடை அடிப்படையில் விற்பனை செய்யாமல், ஏக்கர் கணக்கில் இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்வது வழக்கம். சில இடங்களில் காகித நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் விவசாயிகளிடம் நேரடியாக வாங்கிக்கொள்கின்றன.சவுக்கு மரத்தை ஏக்கர் கணக்கில் விற்பனை செய்வதால், விவசாயிகள் மகசூலின் அளவை துல்லியமாக கணக்கிட முடியவில்லை. இதனால், விவசாயிகளை விட, இடைத்தரகர்கள் அதிக லாபம் சம்பாதிக்கின்றனர்; விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதை கருத்தில் கொண்டு கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், சவுக்கு மர எடையை எவ்வாறு கணக்கிடலாம் என்பது குறித்து, ஒரு அட்டவணையை தயார் செய்து வெளியிட்டது. இந்த அட்டவணையை விவசாயிகள் பயன்படுத்துவதில் சிரமம்

இருந்ததால், பயன்படுத்த முடியவில்லை.தற்போது, நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சவுக்கு அறுவடைக்கு முன் மகசூலின் அளவை துல்லியமாக கணக்கிடும் "சாப்ட்வேர்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு ஏக்கருக்கு எத்தனை டன் மகசூல் கிடைக்கும் என்பதை துல்லியமாக கணக்கிடலாம்.உதாரணமாக, சவுக்கு ஒரு மீட்டர் இடைவெளியில், ஒரு எக்டருக்கு 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. அறுவடைக்காலத்தில் மொத்த மரங்களில் 100 மரங்களின் சுற்றளவை தனித்தனியாக கணக்கிட்டு இந்த சாப்ட்வேரில் பதிவு செய்தால், எக்டருக்கு எத்தனை டன் மகசூல் கிடைத்துள்ளது, என்பதை தெளிவாக விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் சவுக்கு விவசாயிகள் நஷ்டம் அடையாமல், உரிய விலையை வியாபாரிகள் மற்றும் காகித நிறுவனங்களிடம் இருந்து பெற முடியும்.இவ்வாறு, புவனேஸ்வரன் கூறினார்.

**நாற்று நடும் முறையில் பயறு பயிரிடுங்கள்!:வேளாண்துறை அறிவுரை**

அன்னூர்: "பயறு வகைகளை நாற்று நடும் முறையில் பயிரிட்டால், அதிக வருமானம் பெறலாம்' என பயிற்சி வகுப்பில் தெரிவிக்கப்பட்டது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பயறு வகை உற்பத்திக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சார்பில் விவசாயிகளுக்கு கீழ்கதவுகரையில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடந்தது. "ஆத்மா' குழு தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலை பேராசிரியர் லதா பேசுகையில், ""துவரையை நாற்று நடும் முறையில் பயிரிட்டால், அதிக மகசூல் பெறலாம். டி.ஏ.பி., 2 சதவீத கரைசல் தெளித்து, பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்தால், பயறு விளைச்சலில் அதிக வருமானம் பெறலாம்,'' என்றார்.வேளாண் உதவி இயக்குனர் சுந்தர வடிவேல் பேசுகையில்,""அன்னூர் வட்டாரத்தில் 630 எக்டேரில் பயறு வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. இதில் துவரை 42 எக்டேரில் உள்ளது. நாற்று நடும் முறையில் பயிரிட்டால், 50 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். இதில் சொட்டு நீர் பாசனம் அமைத்தால், நீரின் தேவை குறையும்; அதிக பரப்பில் பயிரிடலாம். நீரில் கரையும் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள், துவரை விவசாயிகளுக்கு மானிய விலையில் தரப்படுகின்றன,'' என்றார்.வகுப்பில்,

துணை வேளாண் அலுவலர் திருமூர்த்தி வரவேற்றார். வேளாண் அலுவலர் மனோகரன், வேளாண் துறையில் உள்ள மானியத்திட்டங்கள் குறித்து விளக்கினார். உதவி அலுவலர் வேல்முருகன் நன்றி தெரிவித்தார்.

**சென்னைக்கு அருகில் இயற்கை விவசாயம்**

இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு தற்போது அதிகரித்து வருகிறது. சென்னை அருகிலேயே, இயற்கை உரத்தை வீட்டிலேயே உற்பத்தி செய்து, காய்கறிகளை விளைச்சல் செய்து, அசத்தி வருகிறார் விவசாயி ஒருவர். மாடம்பாக்கத்தை அடுத்த பதுவஞ்சேரி கிராமத்தை சேர்ந்தவர் ஸ்ரீபதி, 45; விவசாயியான, அவர், ஆரோக்கியமான வாழ்விற்காக, இயற்கை உரத்தை வீட்டிலேயே உற்பத்தி செய்து, காய்கறி, வாழை ஆகியவற்றை விளைச்சல் செய்து வருகிறார். அவரிடம் பேசியதில் இருந்து...எத்தனை ஆண்டுகளாக விவசாயம் செய்கிறீர்கள்?
காலம் காலமாக விவசாயம் செய்து வருகிறோம். இடையில், ரியல் எஸ்டேட், அரிசி வியாபாரம் செய்தேன். தொழில் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாததால், மீண்டும் விவசாயத்திற்கு திரும்பிவிட்டேன்.
வீட்டு தோட்டத்தில் கத்தரி, வெண்டை, அவரை, கீரை, முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகளையும், வயலில் நெல், வாழை ஆகியவற்றையும் பயிரிட்டு உள்ளேன்.
இயற்கை உரத்திற்கு மாற என்ன காரணம்? இயற்கை உரத்தை வாங்கி பயன்படுத்துகிறீர்களா அல்லது உற்பத்தி செய்கிறீர்களா?
அதிக விளைச்சலுக்காக, விவசாயிகள், மரபணு மாற்றப்பட்ட செடிகள் மீதும், செயற்கை உரத்தின் மீதும் மோகமாக உள்ளனர்.
அதனால் நமது ஆரோக்கியம் தான் கெடுகிறது. இயற்கை உரம் மூலம் விளையும் காய்கறிகளை சாப்பிட்டு, மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக இயற்கை உரத்திற்கு மாறிவிட்டேன்.
இயற்கை உரம் உற்பத்தி குறித்து, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் பயிற்சி கொடுத்தனர். பின், தொட்டி கட்டி, உரம் தயாரிக்க மானியமும் வழங்கி ஊக்குவித்தனர்.

தற்போது, வீட்டு தோட்டத்திலேயே, இரண்டு தொட்டிகளில் இயற்கை உரத்தை உற்பத்தி செய்து வருகிறேன். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, ஐந்து கிலோ உரத்தை எடுத்து, வீட்டு தோட்டத்திற்கு பயன்படுத்துவேன்.
வாழை தோட்டத்திற்கு அதிகமான உரம் தேவைப்படும் என்பதால், திருச்சியில் இருந்து இயற்கை உரத்தை வாங்கி வருகிறேன். ஒரு முறை தொட்டிகளை நிரப்பினால், ஒரு மாதத்திற்கு தேவையான உரம் கிடைக்கும்.
இயற்கை உரத்தை உருவாக்கும் விதம் எப்படி?
நான்கு அடிக்கு எட்டு அடி அளவுடைய இரண்டு தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. ஒரு மாட்டு வண்டி அளவு சாணத்தை வாங்கி, இரண்டு தொட்டிகளிலும் நிரப்ப வேண்டும். அந்த சாணம் நன்றாக மக்குவதற்கு, குறைந்தது 10 நாட்கள் ஆகும். அதன்பின், இரண்டு அல்லது மூன்று கிலோ மண்புழுக்களை வாங்கி, அதில் விடவேண்டும். அதேபோல், காய்கறி கழிவுகளை தனியாக மக்க வைத்து, அதையும், அவற்றுடன் கலக்க வேண்டும். 20 நாட்களுக்கு பிறகு உரம் தயாராகிவிடும். அதன்பின், அதை எடுத்து பயன்படுத்தலாம்.
எத்தனை ஏக்கர் நிலத்தில் இயற்கை உரத்தை பயன்படுத்துகிறீர்கள்?
சொந்தமாக இரண்டு ஏக்கர், குத்தகைக்கு ஐந்து ஏக்கர் என, மொத்தம் ஏழு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன்.
இரண்டு ஏக்கரில் வாழை, கத்தரி, வெண்டை, கீரை, அவரை, முள்ளங்கி ஆகியவற்றையும், மற்ற மூன்று ஏக்கர் நிலத்தில் நெல்லையும் பயிரிட்டுள்ளேன். இரண்டு ஏக்கர் நிலத்திற்கு மட்டும் இயற்கை உரத்தை பயன்படுத்தி வருகிறேன். இயற்கை உரம் போதுமான அளவில் கிடைக்காத காரணத்தால், மூன்று ஏக்கருக்கு செயற்கை உரத்தையே பயன்படுத்துகிறேன். வரும் காலத்தில் கூடுதல் தொட்டிகளை அமைத்து, இயற்கை உரத்தை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளேன்.
இயற்கை உரத்தில் விளையும் காய்கறிகளை எங்கு விற்பனை செய்கிறீர்கள்?
இந்த பகுதிவாசிகளே தினசரி வாங்கிக் கொள்கின்றனர். சில நேரங்களில் அருகேயுள்ள கடைகாரர்களும் வாங்குகின்றனர். வாழைக் காய்களை, மொத்தமாக விற்பனை செய்கிறேன்.இயற்கை உரத்தை பயன்படுத்துவதால், ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவு ஆகிறது?

மொத்தம் 15 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஒரு கிலோ உரத்தின் விலை ஐந்து ரூபாய். மொத்தம் 500 கிலோ உரம் தேவைப்படும். அறுவடைக்கு 1,500 முதல் 1,700 ரூபாயும், உழவு நடவுக்கு 5,000 ரூபாயும் செலவாகும்.

இயற்கை உரத்தால்

பொருளாதார ரீதியில் லாபமா, நட்டமா?

நான் இயற்கை உரத்திற்கு மாறி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதனால், நட்டம் ஏற்படவில்லை. ஓரளவிற்கு லாபம் கிடைக்கிறது. அரசு உதவியுடன் இயற்கை உர உற்பத்தியை விரிவுபடுத்த முடிவு செய்துள்ளேன்.

**சர்வதேச உணவு தானியங்கள்உற்பத்தி 8.4 சதவீதம் உயரும்**



நடப்பாண்டு, சர்வதேச உணவு தானியங்கள் உற்பத்தி, இதுவரை இல்லாத அளவிற்கு, சென்ற ஆண்டை விட, 8.4 சதவீதம் அதிகரித்து, 250 கோடி டன்னாக உயரும் என, ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (எப்.ஏ.ஓ.,) தெரிவித்துள்ளது.

உலக உணவு தானியங்கள் உற்பத்தி, கடந்த, 2011ம் ஆண்டை விட, சென்ற, 2012ம் ஆண்டு, 6 சதவீதம் அதிகரித்து காணப்பட்டது.நடப்பாண்டு, கோதுமை உற்பத்தி, 7.8 சதவீதம் அதிகரிக்கும். பருப்பு உள்ளிட்ட தானிய வகைகளின் உற்பத்தி, 12 சதவீதமும், அரிசி உற்பத்தி, ஒரு சதவீதமும் உயரும்.கோதுமை பயிரிடும் பரப்பளவை பொறுத்தவரை, ஐரோப்பிய நாடுகள், சீனா மற்றும் அமெரிக்காவில் அதிகமாகவும், இந்தியா, ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளில் குறைவாகவும் உள்ளது.

2013 – 14ம் பயிர் பருவத்தின் இறுதிக்குள், உலக உணவு தானியங்கள் கையிருப்பு, 13.4 சதவீதம் உயர்ந்து, 57.20 கோடி டன்னாக இருக்கும்.உலகளவில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், ஆப்ரிக்காவின் பல பகுதிகளில், குறிப்பாக, மேற்கு ஆப்ரிக்கா, சாட், மாலி, மாரிடானியா, நைகர் மற்றும் செனகலில், பருவம் தவறி பெய்த மழையால், பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.இதனால், 2013 – 14ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், உணவு பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான பிரச்னைகள் அதிகரிக்கும் என, எப்.ஏ.ஓ., தெரிவித்துள்ளது.

**புண்ணாக்கு ஏற்றுமதி 25.81 லட்சம் டன்னாக வளர்ச்சி**



மும்பை: நடப்பு நிதியாண்டின் நவம்பர் மாதம் வரையிலான எட்டு மாத காலத்தில், நாட்டின் ஒட்டு மொத்த புண்ணாக்கு ஏற்றுமதி, 25.81 லட்சம் டன்னாக அதிகரித்து உள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 23.91 லட்சம் டன்னாக இருந்தது என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோயா புண்ணாக்குஅதேசமயம், சென்ற நவம்பர் மாதத்தில், இதன் ஏற்றுமதி, கடந்தாண்டின் இதே மாதத்தை விட, 13 சதவீதம் குறைந்து, 6.42 லட்சம் டன்னிலிருந்து, 5.61 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.கடந்த அக்டோபர் மாதம், ஒரு டன் சோயா புண்ணாக்கின் விலை, 541 டாலராக இருந்தது. இது, சென்ற நவம்பர் மாதத்தில், 557 டாலராக உயர்ந்தது.

அதே போன்று, கடுகு மற்றும் ஆமணக்கு புண்ணாக்குகளின் விலையும், முறையே, 242 டாலர்(240 டாலர்) மற்றும்97 டாலர்(93 டாலர்) என்ற அளவில் அதிகரித்திருந்தன. சென்ற நவம்பர் மாதத்தில், கடுகு புண்ணாக்கு ஏற்றுமதி, கடந்தாண்டின் இதே மாதத்தை விட, 50 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 66,966 டன்னிலிருந்து, 27,993 டன்னாக சரிவடைந்துள்ளது.சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 5.17 லட்சம் டன்னிலிருந்து, 5.03 லட்சம் டன்னாகவும், ஆமணக்கு புண்ணாக்கு ஏற்றுமதி, 45,216 டன்னிலிருந்து, 27,586 டன்னாகவும் சரிவடைந்துள்ளன.

**வளர்ச்சி:** நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில், தென்கொரியாவிற்கான புண்ணாக்கு ஏற்றுமதி, 22 சதவீதம் வளர்ச்சி கண்டு, 5.78 லட்சம் டன்னிலிருந்து, 7.03 லட்சம் டன்னாக அதிகரித்து உள்ளது.நம் நாட்டிலிருந்து, தென்கொரியா, ஈரான், தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேஷியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகளவில் புண்ணாக்கு வகைகள் ஏற்றுமதியாகின்றன.

**ரப்பர் இறக்குமதிக்குதடை விதிக்க கோரிக்கை**



கோட்டயம்:உள்நாட்டு விவசாயிகளின் நலன்கருதி,இயற்கை ரப்பர் இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும் என, ரப்பர் வாரியத்தின் செயற்குழு கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது

ரப்பர் இறக்குமதி மீது தடை விதிக்காத பட்சத்தில், முன்கூட்டிய உரிமத்தின்

அடிப்படையில், வரி விலக்குடன் கூடிய இறக்குமதியை ரத்து செய்ய வேண்டும். மேலும், இறக்குமதி செய்யப்படும் ரப்பர் மீது, எவ்வித உச்சவரம்பும் இல்லாமல், 25 சதவீத சுங்க வரி விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.
மத்திய மற்றும் மாநில அரசுகள், கூட்டு திட்டத்தில் ரப்பரை கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். கேரள அரசு, ரப்பர் கொள்முதல் மீது, 5 சதவீத வரி விதிக்கிறது. இதுவும் குறைக்கப்பட வேண்டும்.
சாலைகள் அமைப்பு பணியில், ரப்பரை பயன்படுத்தும் வகையில், விழிப்புணர்வு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும். விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில், ரப்பர் விலை உறுதி நிதியத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என, ரப்பர் வாரிய கூட்டத்தில், இதன் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.ரப்பர் வாரியத்தின் தலைவர் ஷீலா தாமஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என, தெரிவிக்கப்பட்டது.

**எண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.25 உயர்வு**



சேலம் : எள் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியதன் எதிரொலியாக, வட மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் எள் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டு உள்ளது.

**தட்டுப்பாடு:** எள்ளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மின் தடை காரணமாக, எண்ணெய் ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. இதனால், பிரபல எண்ணெய் நிறுவனங்கள், தங்கள் தயாரிப்பு நல்லெண்ணெய் விலையை, நேற்று, லிட்டருக்கு, 25 ரூபாய் வரை, உயர்த்தி உள்ளன.
தமிழகத்தில், நடப்பாண்டு எள் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. கர்நாடகா,ஆந்திரா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, தமிழக எண்ணெய் ஆலைகளுக்கு எள் விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது. மத்திய அரசு, வெளிநாடுகளுக்கு எள் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியது. இதன் எதிரொலியாக வெளி மாநிலங்களில் இருந்து, அதிக அளவில் எள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்த எள் முற்றிலும் நின்று விட்டது. எள்ளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், அதன் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது.வெள்ளை எள் கிலோ, 140 ரூபாய்க்கு விற்றது, 160 ரூபாயாகவும், கறுப்பு எள் கிலோ, 110 ரூபாய்க்கு விற்றது, 130 ரூபாயாகவும் உயர்ந்து உள்ளது. இந்த விலைஉயர்வு, எண்ணெய் விலையில் திரொலித்துள்ளது.

இந்நிலையில், மின் தடை காரணமாக, ஈரோடு மாவட்டம் சிவகிரி, வெள்ளக்கோவில், காங்கேயம், திருப்பூர், தாராபுரம், திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் பகுதிகளில் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன.

**உற்பத்தி:** எண்ணெய் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டதன் எதிரொலியாக பிரபல எண்ணெய் நிறுவனங்கள், தங்கள் தயாரிப்பு எண்ணெய்களின் விலையை, லிட்டருக்கு, 25 ரூபாய் வரை உயர்த்தியுள்ளன. பிரபல நிறுவனத்தின் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் விலை, 220லிருந்து, 245 ரூபாயாக அதிகரித்துள்ளது. உள்ளூர் தயாரிப்பு எண்ணெய் விலை, லிட்டர், 170லிருந்து, 190 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.7,200 கோடி கடன்: மத்திய அரசு அறிவிப்பு**



புதுடில்லி: சர்க்கரை ஆலைகளை நிதி நெருக்கடியிலிருந்து மீட்கும் வகையில், அவற்றுக்கு வங்கிகள் மூலமாக, 7,200 கோடி ரூபாயை, கடனாக கொடுக்க, மத்திய அரசு முன்வந்துள்ளது.

டில்லியில், நேற்று நடந்த, மத்திய அமைச்சரவை குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து, விவசாய அமைச்சர், சரத் பவார் கூறியதாவது: சர்க்கரை ஆலைகளை, நிதி நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான நடவடிக்கைகள் குறித்து, நேற்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இதில், சர்க்கரை ஆலைகளுக்கு, வங்கிகள் மூலமாக, 7,200 கோடி ரூபாயை கடனாக கொடுப்பது என, முடிவெடுக்கப்பட்டு உள்ளது. இந்த தொகையை, ஆலைகள், விவசாயிகளுக்கு வழங்கலாம். இதற்காக, 12 சதவீத வட்டி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அதில் சில சலுகைகளும் அளிக்கப்பட உள்ளன. ஆனாலும், சர்க்கரை இறக்குமதிக்கான வரியை, உடனடியாக குறைக்கும் திட்டம், எதுவுமில்லை. இத்துடன், பெட்ரோலில், 'எத்தனால்' கலப்பை, 10 சதவீதமாக அதிகரிக்கவும், அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு, சரத் பவார் கூறினார். எத்தனால் என்பது சர்க்கரை கழிவுகளிலிருந்து கிடைக்கும், சுத்திகரிக்கப்பட்ட பொருள். இதை, பெட்ரோல், டீசல் ஆகியவற்றுடன் கலந்து, மாற்று எரிபொருளாக பயன்படுத்தலாம்.

**மதுரை மாவட்டத்தில் நெல் கொள் முதல் 400 டன் தான்**

மதுரை:மதுரை மாவட்டத்தில் ஒரு மாதத்தில் 400 டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டது.குறுவை சாகுபடியில் இருபோக நிலங்களில் 45 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி நடந்தது. தற்போது வரை 90 சதவீத அளவிற்கு அறுவடை ஆகிறது. முதன்முறையாக குறுவை நெல் கொள்முதல் செய்ய, 10 மையங்களை அரசு திறந்தது. இம்மையங்களில், "ஒரு டன் நெல்லுக்கு ரூ. 1415 வழங்கப்படும், நெல்லில் ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டும்,' என அறிவிக்கப்பட்டது. வியாபாரிகள் கூடுதல் விலை தந்ததால், விவசாயிகள் அங்கு நெல் விற்றனர். தற்போது விவசாயிகள் நெல்லை அரசு மையங்களில் விற்பனை செய்ய முன்வந்துள்ளனர். விவசாயிகளுக்கு முழுத்தொகையை வழங்காததே இதற்கு காரணம். குறைவான தொகை கிடைத்தாலும் அரசிடம் நெல்லை விற்க விவசாயிகள் முன்வந்தனர். கடந்த ஒரு மாதத்தில் 400 டன் அளவிற்கு நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளை விட இது குறைவு.

**எண்ணெய் பனை சாகுபடிக்கு மானியம்:விவசாயிகளுக்கு அழைப்பு**

உடுமலை:எண்ணெய் பனை சாகுபடிக்கு அரசு வழங்கும் மானியத்திட்டங்களுக்கு மடத்துக்குளம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து மடத்துக்குளம் வட்டார வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குனர் செல்வராஜ் அறிக்கை: தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் எண்ணெய் பனை சாகுபடி பரப்பை விரிவாக்கம் செய்ய, தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. நடப்பாண்டில், திருப்பூர் மாவட்டத்தில், மடத்துக்குளம் வட்டாரம் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் பனை சாகுபடி செய்ய நல்ல வடிகால் வசதியுடன் கூடிய வளமான செம்மண், வண்டல், இருமண்பாடு நிலம் ஏற்றதாகும். ஏக்கருக்கு 56 கன்றுகள் வரை நடவு செய்யலாம். கன்று நட்டு 18 மாதத்தில் பூக்க ஆரம்பிக்கும். 30 மாதம் வரை வெளிவரும் பூக்களை கையால், அல்லது உளி கொண்டு நீக்கி விட வேண்டும். மூன்றாம் ஆண்டிலிருந்து பழக்குலைகளை அறுவடை செய்யலாம்.

அறுவடை செய்த குலைகளை பாமாயில் உற்பத்திக்காக அரசு நிர்ணயம் செய்த விலைக்கு தனியார் நிறுவனமே கொள்முதல் செய்து கொள்ளும். ஒரு ஆண்டுக்கு மரமொன்றுக்கு 15 முதல் 18 பழக்குலைகள் கிடைக்கும். 6 வது ஆண்டு முதல் நன்கு பராமரித்தால், ஒரு பழக்குலைக்கு 15 முதல் 30 கிலோ எடை கிடைக்கும். நல்ல தரமான குலைகளின் எடை 60 முதல் 80 கிலோ வரை இருக்கும்.30 ஆண்டுகளுக்கு நிலையான மாத வருமானம் தரக்கூடிய எண்ணெய் பனை சாகுபடியில், வேலையாட்கள் தேவை குறைவாகும். முதல் மூன்று ஆண்டுகள் ஊடுபயிர் பயிரிட்டு, கூடுதல் வருமானம் பெறலாம்', மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை விவசாயிகள் அணுகலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் தூய பால் உற்பத்தி திட்டம்**

திண்டுக்கல்: தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ரூ.28.42 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், விவசாயிகளுக்கு, கால்நடைகளுக்கு தீவனம் அளிப்பது, சுகாதாரத்துடன் கால்நடைகளை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படும். பால் கறப்பதற்கு தேவைப்படும் சில்வர் பாத்திரங்கள் இலவசமாக அளிக்கப்படும். மேலும், பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனை கூடங்கள் நவீனப்படுத்தப்படும். புதிய பால் குளிர்விப்பான்கள் நிறுவ 100% மானியம் அளிக்கப்படும். இதன் மூலம் பாலின் தரத்தை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**காய்கறிகள் சாகுபடிக்கு நிழல் வலை : விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம்**

தேனி: காய்கறிகள் சாகுபடிக்கு, நிழல்வலை அமைக்க தோட்டக் கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் பருவமழை எதிர்பார்த்த அளவு இல்லை. பல மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் உள்ளது. காய்கறிகள், குறைந்த வெயிலில் நன்றாக விளையும். எனவே, காய்கறிகளுக்கு நிழல்வலை அமைக்க,தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. விவசாயிகள், 50 சதவீதம் அல்லது 35 சதவீதம் நிழல் தரும் வலைகள் தேவையா, என சாகுபடி

செய்யப்படும் பயிருக்கு ஏற்ப, வலைகளை தேர்வு செய்யலாம். மரக்கம்புகள் ஊன்றி நிழல் வலை அமைக்க, ஒரு சதுர மீட்டருக்கு 410 ரூபாய் செலவாகும். இதில் 50 சதவீதம் மானியமாக, 210 ரூபாய் தோட்டக்கலைத்துறை வழங்கும்.மூங்கில் கம்புகள் ஊன்றி நிழல்வலை அமைக்க, ஒரு சதுர மீட்டருக்கு 300 ரூபாய் செலவாகும். இதில் பாதி, 150 ரூபாய் மானியம் வழங்கப்படும்.அதிக பட்சமாக ஒரு விவசாயிக்கு, ஆயிரம் சதுர மீட்டருக்கு நிழல்வலை அமைக்க மானிய உதவிகள் வழங்கப்படும். விருப்பமுள்ள விவசாயிகள் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் கூறுகையில், "" தற்போது இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பகுதியிலும் 20 விவசாயிகள் ஒருங்கிணைத்து, ஒரே இடத்தில் தொகுப்பாக நிழல்வலை அமைத்து, நாற்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதனால், விவசாயிகளுக்கு தரமான நாற்று கிடைக்கும். உற்பத்தி செலவும் குறையும். ஒரே மாதிரி காய்கறிகள், சாகுபடி செய்வதன் மூலம் விற்பனை

வாய்ப்பும், பராமரிப்பு தொழில்நுட்ப உதவிகளும், அரசின் மானிய உதவிகளும் எளிதில் கிடைக்கும்," என்றார்

**விலை உயர்வால் முட்டை நுகர்வு குறைவு : கொள்முதல் விலையில் 15 காசுகள் சரிவு**

நாமக்கல்: முட்டையின் நுகர்வு அதிகரித்ததால், தொடர்ந்து விலை உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது கூடுதல் விலை காரணமாக, மக்களிடம் நுகர்வு குறைந்து வருகிறது. அதனால், முட்டையின் கொள்முதல் விலை, நேற்றைய நிலவரப்படி, 15 காசுகள் சரிந்தது. தேசிய அளவில், 24 முட்டை மண்டலங்களில், தினசரி முட்டையின் நுகர்வு, ஏற்றுமதி ஆகியவற்றை கணக்கில் கொண்டு, சம்பந்தப்பட்ட முட்டை மண்டல ஒருங்கிணைப்பு கமிட்டி மூலம், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதில், முட்டை உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகளுக்கும் இடையே நிர்ணயக்கப்படும் விலையை கொண்டே, முட்டை கொள்முதல் விலை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. வடமாநிலங்களில், கடுங்குளிர், வடகிழக்கு பருவமழை ஆகியவற்றால், முட்டையின் தேவை, 15 நாட்களுக்கு மேலாக அதிகரித்தது. அதனால், முட்டை மண்டலங்கள், அதிகபட்சமாக, 450 காசுகள் வரை, கொள்முதல் விலையை நிர்ணயித்தன. வெளிமார்க்கெட்டில், முட்டைக்கு, பத்து காசுகள் வரை சேர்த்து வைத்து விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், முட்டை விலை அதிகரித்துக் கொண்டே சென்றதால், நுகர்வோரின் எண்ணிக்கை, சில நாட்களாக வெகுவாக குறைந்து வருகிறது. அதையடுத்து, முட்டை மண்டங்களின் கொள்முதல் விலை, சரிவை நோக்கிச் செல்கிறது. இந்நிலையில், கடந்த, 15 நாட்களாக, ஒரே மாதிரியாக இருந்த முட்டை கொள்முதல் விலையில், நேற்று, திடீரென, முட்டைக்கு, 15 காசு வரை, சில முட்டை மண்டலங்கள் குறைத்தன. அதன்படி, நேற்றைய விலை பட்டியல் பின்வருமாறு: கடந்த வார விலை. அஹமதாபாத், 413 காசுகள் (428), பர்வாலா, 388 காசுகள் (380), புதுடில்லி, 410 காசுகள் (405), இண்டூர், 395 காசுகள் (390), கோல்கத்தா, 415 காசுகள் (425), லூதியானா, 387 காசுகள் (392), நாமக்கல், 390 காசுகள் (403), நவாப்பூர், 375 காசுகள் (380), பஞ்சாப், 384 காசுகள் (392) என, அதிகப்பட்சமாக, கொள்முதல் விலையில், 15 காசுகள் வரை விலை குறைக்கப்பட்டது.

"சபரிமலை ஐயப்பன் கோவில் சீசன், சில்லரை விலையில் கூடுதல் விலை நிர்ணயம் ஆகியவற்றால், மக்களிடம் நுகர்வு குறைந்துள்ளது. இதே நிலை நீடித்தால், மேலும் முட்டையின் விலை குறைய வாய்ப்புள்ளது. இருந்தும், கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பிறப்பின் முதல் வாரத்தில், முட்டை விலை அதிகரிக்கும்' என, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் 14 மாவட்டங்களில் தூய பால் உற்பத்தி திட்டம்திண்டுக்கல்: பால் தரத்தை மேம்படுத்த, தமிழகத்தில் 14 மாவட்டங்களில் தூய பால் உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பால் தரமுள்ளதாக உள்ளது. அதே போல், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பாலின் தரத்தையும் மேம்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ரூ.28.42 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், விவசாயிகளுக்கு, கால்நடைகளுக்கு தீவனம் அளிப்பது, சுகாதாரத்துடன் கால்நடைகளை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படும். பால் கறப்பதற்கு தேவைப்படும் சில்வர் பாத்திரங்கள் இலவசமாக அளிக்கப்படும். மேலும், பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனை கூடங்கள் நவீனப்படுத்தப்படும். புதிய பால் குளிர்விப்பான்கள் நிறுவ 100% மானியம் அளிக்கப்படும். இதன் மூலம் பாலின் தரத்தை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**வரத்து குறைவால் மீன் விலை "கிடுகிடு'**

ராமநாதபுரம்: ராமேஸ்வரத்தில் விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாததால், மீன்களின் விலை கிலோவிற்கு 20 ரூபாய் வீதம் உயர்ந்துள்ளது. புயல் அபாயத்தால், ராமேஸ்வரம் விசைப்படகுகள் மீனவர்கள் நேற்று முன் தினம் கடலுக்குச் செல்லவில்லை. நாட்டுப்படகு மீனவர்கள் மட்டும் தொழில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மீன்களின் விலை கிலோவிற்கு 20 ரூபாய் வீதம்

கணிசமாக உயர்ந்துள்ளன. கிலோ ரூ.60க்கு விற்ற வில மீன் 80க்கும், 100க்கு விற்ற வில மீன்( பெரியது) 120க்கும், 70க்கு விற்ற நகரை(பெரியது) ரூ.90க்கும், 140க்கு விற்ற பாறை 160க்கும், 25க்கு விற்ற சூடை 40க்கும், 30க்கு விற்ற காரல் 50க்கும், 50க்கு விற்ற திருக்கை 70க்கும், 180க்கு விற்ற முரல் 200க்கும், 90க்கு விற்ற முரல் 110க்கும், 100க்கு விற்ற கட்டா 120க்கும், 80க்கு விற்ற பன்னா 100க்கும், 220க்கு விற்ற நண்டு 240க்கும், 100க்கு விற்ற நண்டு 120க்கும் விலை உயர்ந்துள்ளது.

புற்றுநோயை விரட்டும் நித்யகல்யாணி ஓட்டடப்பிடாரம் பகுதி விவசாயிகள் பயிரிட ஆர்வம்ஓட்டப்பிடாரம்: ஓட்டப்பிடாரம் பகுதியில் புற்றுநோயை குணப்படுத்த மருந்தாக பயன்படும் நித்திய கல்யாணி செடியை விவசாயிகள் பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.

ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி போன்ற பகுதியில் அதிக லாபம் தரும் நித்திய கல்யாணி பயிரிடுவதில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். பொதுவாக இந்த செடி ஐந்து இதழ்களுடைய வெண்மை அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதன் இலை கசப்பாக இருப்பதால் ஆடுமாடுகள் இதனை உட்கொள்வதில்லை. இதனை சுடுகாட்டுப் பூ, கல்லறைப் பூ என பல பெயர்களில் மக்கள் அழைத்து வருகின்றனர்.
தமிழகத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், ராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் தரிசு நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மணல் பாங்கான இடத்திலும், தரிசு நிலங்களிலும், தானாக வளரும் தாவரமான நித்திய கல்யாணி எல்லாப் பருவங்களிலும் பூக்கும் தன்மையுடையது. அழகுத் தாவரமாக வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்படுகிறது. தற்போது இந்த செடி முழுவதும் மருத்துவக் குணம் நிறைந்தவையாக இருப்பதால் வணிக ரீதியாக விவசாயிகள் பயிரிடத் துவங்கியுள்ளனர்.
நித்திய கல்யாணியின் இலைகள், பூ, தண்டு மற்றும் வேர்கள் மருத்துவ பயன் கொண்டவையாக உள்ளன. இதில் இருந்து செயல்திறன்மிக்க வேதிப்பொருட்களான வின்க்ரிஸ்டின், வின்ப்ளாஸ்டின் போன்ற உயிர்

வேதிப்பொருட்கள் பிரித் தெடுக்கப்படுகின்றன. மேலும் ஆல்கலாய்டுகள், அஜ்மாலின், ரவ்பேசின், செர்பென்டைன், ரிசெர்பைன் போன்ற வேதிப்பொருட்களும் கிடைக்கிறது. இந்த உயிர்வேதிப் பொருட்கள் மனநோய்களை குணமாக்கவும், ரத்த அழுத்தம்,சர்க்கரையை குறைக்கவும், அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கவும் பயன் படுத்தப்படுகிறது. குறிப்பாக வின்க்ரிஸ்டின், வின்ப்ளாஸ்டின் ஆகியவை புற்றுநோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்படி அதிக மருத்துவக்குணங்கள் கொண்ட நித்தியகல்யாணி செடியின் இலைகளும், வேரும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. செடி வளர்ந்த 6-வது, 9-வது மற்றும் 12-வது மாதங்களில் இலைகளைப் பறித்து பதப்படுத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது. 12-வது மாதத்தில் தரைமட்டத்தில் செடியை அறுத்து விட்டு வேர்களை எடுத்துப் பதப்படுத்தி வியாபாரத்திற்கு அனுப்புகின்றனர். நித்ய கல்யாணியின் இலைகள் அமெரிக்கா மற்றும் ஹங்கேரிக்கும், வேர்கள் மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு எற்றுமதி செய்யப்படுகிறது. லாபம் தரும் நித்திய கல்யாணி செடியை தனியார் நிறுவனங்கள் விவசாயிகளை அணுகி பயிரிடுவதற்கான ஆலோசனைகளையும், உதவிகளை செய்து வருகின்றனர்.

**கோமாரி நோய் தாக்கி பத்து மாடுகள் பலி பீதியில் கால்நடை வளர்ப்போர்**

காரியாபட்டி: காரியாபட்டி பகுதியில், கோமாரி நோய் தாக்கி, பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகின. மேலும், பல மாடுகளுக்கும் இந்நோய் பரவியிருப்பதால், கால்நடை வளர்ப்போர் பீதியில் உள்ளனர். காரியாபட்டி பகுதியில் சக்கரகோட்டை, விட்டிலாரேந்தல், சத்திரம்புளியங்குளம், துலுக்கன்குளம் உள்ளிட்ட கிராமங்களில், ஆடு, மாடுகள், அதிக எண்ணிக்கையில் வளர்க்கப்படுகின்றன. இந்நிலையில், தற்போது, மாடுகளை கோமாரி எனும் நோய் தாக்கி வருகிறது. காற்று மூலம் பரவி, இந்நோய் தாக்கியதில், கடந்த ஒருவாரமாக, இப்பகுதியைச் சேர்ந்த மாரியம்மாள், இருளாயி, சிட்டு, முருகன் உள்ளிட்டோரின் பத்துக்கும் மேற்பட்ட மாடுகள், இளம்கன்றுகள் பலியாகின. மேலும், பல

மாடுகளுக்கும் இந்நோய் பரவியிருப்பதால், கால்நடை வளர்ப்போர் பீதியில் உள்ளனர். ஆடுகளையும் இந்நோய் விட்டுவைக்கவில்லை.

சக்கரகோட்டை இருளாயி: மேய்ச்சலுக்கு சென்று திரும்பிய மாடுகள், கோமாரி நோயால், வாயில் நுரை தள்ளி, கால்களில் வெடிப்பு ஏற்பட்டு, பலியாயின. விவசாயத்திற்காக வாங்கிய கடனை, அடைக்க முடியாத நிலையில், மாடுகளும் பலியாவதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து வருகிறோம். அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

விட்டிலாரேந்தல் மாரியம்மாள் : காணை (கோமாரி) நோய் தாக்கியதில், மாடுகளின் நாக்கு சிவப்பு நிறத்தில் மாறி, கால்களில் வெடிப்பு ஏற்பட்டு, அவை பலியாயின. இதனால், எஞ்சியுள்ள மாடுகளை வளர்க்க, பங்குதாரர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர், என்றார்.

காரியாபட்டி கால்நடை மருத்துவர் மோகன் : பருவநிலை மாற்றத்தால் கிடை மாடுகளுக்கு ஏற்படும் காய்ச்சல்தான் இது. கோமாரி நோய் இல்லை. இருந்தாலும் அவ்வப்போது பரிசோதித்து சிகிச்சை அளித்து வருகிறோம். மாடுகள் பலியானது குறித்து புகார் வரவில்லை, என்றார்.

**கமுதியில் கருகும் நெல்**

கமுதி:கமுதி அருகே முதல்நாடு, பெருமாள் குடும்பன்பட்டி உட்பட பல பகுதி விவசாயிகள் நெல் பயிரிட்டனர். ஏக்கருக்கு நெல் பயிரிவதற்கு களை எடுப்பது, டிராக்டர் செலவு, கூலியாட்கள் மற்றும் உரம் என சுமார் 5000 முதல் 7000 ரூபாய் வரை செலவாகிறது. எதிர்பார்க்கும் விளைச்சல் இருந்தால் தான், 50 மூடை நெல் கிடைக்கும். இதையும் அதிகபட்சமாக 15 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே விற்க முடியும். கூடுதலாக உழைத்தாலும் மிகக்குறைந்த லாபமே இருப்பதால், சிலர் விவசாய நிலங்களை, விலை நிலங்களாக மாற்றி வருகின்றனர். தற்போது கமுதி பகுதியில் போதிய மழையின்றி பயிரிட்ட நெல் கருகி வருவதால், நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

**தேனி நிலக்கடலை சந்தைகளில் மவுசு**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்ட வாரச்சந்தைகளில், தேனி நிலக்கடலையை மக்கள் விரும்பி வாங்குகின்றனர். ராமநாதபுரம், பரமக்குடி உட்பட பல இடங்களில் நடக்கும் வாரச்சந்தைகளில், தேனி மாவட்ட நிலக்கடலை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன. நன்கு பருத்த இரண்டு, மூன்று பருப்பு கண் கொண்ட கடலைகளை பேரம் பேசாமல் மக்கள் வாங்கிச் செல்கின்றனர். பரமக்குடி வியாபாரி காளியம்மாள் கூறுகையில், ""தேனி, ஆண்டிபட்டி, உசிலம்பட்டி விவசாயிகளிடம் நிலக்கடலை வாங்குகிறோம். ஒரு படி 30 ரூபாய்க்கு விற்கிறோம். தினமும் 150 கிலோ போணியாகிறது. இளையான்குடி, சாலைக்கிராமம், ராமநாதபுரம் சந்தைகளில், தேனி நிலக்கடலைக்கு நல்ல கிராக்கி உள்ளது," என்றார்

**வழுக்கையான பழப்பண்ணை மரங்கள் குன்னூரில் இலையுதிர் காலம்**

ஊட்டி : குன்னூரில் இலையுதிர் காலம் துவங்கியுள்ள நிலையில், குன்னூர் சிம்ஸ் பூங்காவில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில், 100க்கும் மேற்பட்ட மரங்கள் வழுக்கையாகி உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் பனிக்காலம் துவங்கியுள்ள நிலையில், இலையுதிர் காலம் துவங்கியுள்ளது. குன்னூர் சிம்ஸ்பூங்காவில் உள்ள பழ பண்ணையில் பிளம், பீச், பேரி, ஆப்பிள், மாதுளை, சப்போட்டா என, 100க்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளன; இலையுதிர் காலம் துவங்கியுள்ள நிலையில், இந்த மரங்களில் உள்ள இலைகள் உதிர்ந்து, மொட்டையாக காட்சியளிக்கின்றன.

பண்ணைக்கு, நாற்று, விதைகளை வாங்க வரும் மக்கள், சுற்றுலாப் பயணிகள், வழுக்கையாகி நிற்கும் மரங்களை வியப்புடன் பார்த்து செல்கின்றனர். "இந்த மரங்களில் பிப்ரவரி மாதங்களில், மீண்டும் இலைகள் மலர்ந்து, பூக்கள் பூக்க துவங்கும்; பின், காய்கள் காய்த்து, வரும் ஜூன் மாதங்களில், சீசன் துவங்கும்' என, தோட்டக்கலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அரசின் விலையில்லா ஆடுகள் கோமாரி நோய் தாக்கியதில் பலி**

பாபநாசம்: பாபநாசம் அருகே கோவில் தேவராயன்பேட்டை கிராமத்தில் கோமாரி நோயினால் அரசு வழங்கிய, 40 விலையில்லா ஆடுகள் பலியான சம்பவம் பயனாளிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. தஞ்சை மாவட்டம் பாபநாசம் அருகே கோவில்தேவராயன்பேட்டை தில்லைநகர் காலனி தெருவில் தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு நான்கு ஆடுகள் வீதம், 200 ஆடுகள் வழங்கப்பட்டது.இந்நிலையில், தற்போது அப்பகுதியில் வேகமாக கால்நடைகளை தாக்கி வரும் கோமாரி நோயினால் கண்ணன் என்பவரின் இரண்டு ஆடுகள் நேற்று முன்தினம் பரிதாபமாக இறந்தது. இதுபற்றி பாதிக்கப்பட்ட கண்ணன் கூறியதாவது: எங்கள் கிராமத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் ஆடுகள் வழங்கப்பட்டன. இதில், இதுவரை, 40 ஆடுகள் வரை கோமாரி நோயினால் இறந்துவிட்டன. எனக்கு வழங்கபட்ட நான்கு ஆடுகளில் இரண்டு ஆடுகள் நேற்று முன்தினம் இறந்துவிட்டது. மேலும் இரண்டு ஆடுகள் கவலைக்கிடமாக உள்ளது. மேலும் இக்கிராமத்தில் இன்னும் ஏராளமான மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு கோமாரிநோய் தாக்கி உள்ளது. நோயின் தாக்கத்தை குறைக்க போதுமான மருந்துகளும், மருத்துவரும் எங்கள் கிராமத்திற்கு கிடைக்கவில்லை. எனவே, மீதமுள்ள கால்நடைகளை காக்கும் விதத்தில் உடனடியாக மருத்துவக் குழுவினர் வருகை தந்து சிகிச்சை அளிக்கவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.
கால்நடைகளைக்கு தீவனமான வைக்கோல் விலை மூன்று மடங்கு...உயர்ந்தது பற்றாக்குறையால் வைக்கோல் வாங்குவதில் போட்டி

**நிலக்கோட்டை:விளாம்பட்டியில் நெல் அறுவடை நடப்பதால் மாடுகள்**

வைத்திருப்பவர்களுக்கு இடையே தீவனம் விலைக்கு வாங்குவதில் போட்டி ஏற்பட்டுள்ளது. வைக்கோலுக்கு கிராக்கி ஏற்பட்டு விலையும் மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை கைகொடுக்கவில்லை. வடகிழக்கு பருவ மழையும் ஏமாற்றிவிட்டது. வழக்கத்தை விட குறைவாக பெய்துள்ளது. மழை இல்லாததால் விவசாயிகள் கால்நடைகளை

விற்று வருகின்றனர். பசு வளர்ப்பவர்கள் மட்டுமே போராடி வளர்த்து வருகின்றனர். பருவ மழை ஏமாற்றினாலும், வைகை ஆற்றுப்படுகையில் உள்ள சிவஞானபுரம், சித்தர்கள்நத்தம், அணைப்பட்டி, விளாம்பட்டி, மட்டப்பாறை, ராமராஜபுரம் ஆகிய பகுதிகளில் நெல் பயிரிடப்பட்டு, அறுவடை நடக்கிறது. இது திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் அல்லாமல், பிற மாவட்டத்தில் மாடு வைத்திருப்பவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மாடு வைத்திருப்பவர்கள் விளாம்பட்டியில் குவிந்து, நாள்தோறும் டிராக்டர்கள், லாரிகளில் வைக்கோலை ஏற்றிச் செல்கின்றனர்.

இதனால் வைக்கோலுக்கு கிராக்கி ஏற்பட்டு உள்ளது. விலையும் மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. ஒரு லோடு டிராக்டர் வைக்கோலின் விலை 4 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. தீவனம் கிடைத்ததால் வாங்குபவர்களும், வைக்கோலுக்கு நல்ல விலை கிடைத்ததால் விற்பவர்களும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

கொக்குபட்டியைச் சேர்ந்த மருதுபாண்டி கூறுகையில், ""மழை கைவிட்டதால் மாடுகளை காப்பாற்ற தீவனத்திற்கு அலைந்து திரிந்தோம். விளாம்பட்டியில் நெல் பயிரிட்டது எங்களுக்கெல்லாம் வரப்பிரசாதமாகிவிட்டது" என்றார். மதுரை, உசிலம்பட்டி, திண்டுக்கல், வத்தலக்குண்டு, விருவீடு, நத்தம் ஆகிய பகுதிகளில் இருந்து வைக்கோல் வாங்கி செல்கின்றனர்.

**இரண்டாம் போக சாகுபடி வீரபாண்டியில் தொடக்கம்**

தேனி: தேனி வீரபாண்டி, குச்சனூர் பகுதிகளில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கான பணிகள் தொடங்கி உள்ளன. தேனி மாவட்டத்தில் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகள் எதிர்பார்த்த அளவு இல்லை. கேரளா மற்றும் அணை நீர் பிடிப்பு பகுதியில் பெய்த மழையால், முல்லை பெரியாறு அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

முதல் போக சாகுபடி அறுவடை முடிந்துள்ளது. இதே நிலை நீடித்தால், இரண்டாம்

போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என பொதுப்பணித்துறை எச்சரித்து வருகிறது. இருந்தாலும், கம்பம் பள்ளத்தாக்கில் நடவு செய்துள்ளனர்.தற்போது குச்சனூர், உப்புக்கோட்டை, உப்பார்பட்டி, வீரபாண்டி, பழனிசெட்டிபட்டி பகுதிகளில் இரண்டாம் போக நெல் சாகுபடி பணிகள், தொடங்கி நடந்து வருகின்றன. இதனால், தண்ணீர் தேவைக்கு என்ன செய்யப்போகிறோம், என தெரியவில்லை என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தவித்து வருகின்றனர்

**நவதானியம் சாகுபடி பரப்பு குறைவு**

பெரியகுளம்: பெரியகுளம் ஒன்றியப் பகுதிகளில், மானாவரி நிலங்களில் கம்பு, சோளம், சாமை, குதிரைவாலி உட்பட பலகையான நவதானிங்களை பயிர் செய்து வந்தனர். விவசாயிகள், விவசாயத்துடன் நாட்டுகோழி வளர்ப்பையும், இணைத்தொழிலாக செய்து வருகின்றனர். டி.கள்ளிப்பட்டி, கைலாசபட்டி, சருத்துப்பட்டி உட்பட பல கிராமப்பகுதியில் நாட்டுக்கோழி அதிகளவில் வளர்க்கப்பட்டு வந்தது. நாட்டுக்கோழி அடிச்சு, சூப் தயாரித்து குடிப்பது கிராமத்து கலாசாரத்தில் உள்ளது. நாட்டுக்கோழிகள் கிராமப்பகுதிகளிருந்து, பெரியகுளம், தேனி, ஆண்டிபட்டி, கம்பம், போடி சந்தைகள் மற்றும் கோழி கடைகளில் விற்கப்பட்டு வந்தது. தற்போது பெரியகுளம் பகுதியில் மானாவரி நிலங்களில் நவதானியங்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிடவில்லை. இதனால் நாட்டுக்கோழி வளர்ப்பு குறைந்துள்ளது.

**காய்கறிகள் சாகுபடிக்கு நிழல் வலை விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம்**

தேனி:காய்கறிகள் சாகுபடிக்கு, நிழல்வலை அமைக்க தோட்டக்கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் பருவமழை எதிர்பார்த்த அளவு இல்லை. பல மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் உள்ளது. காய்கறிகள், குறைந்த வெயிலில் நன்றாக விளையும்.

எனவே, காய்கறிகளுக்கு நிழல்வலை அமைக்க,தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. விவசாயிகள், 50 சதவீதம் அல்லது 35 சதவீதம் நிழல் தரும் வலைகள் தேவையா, என சாகுபடி செய்யப்படும் பயிருக்கு ஏற்ப, வலைகளை தேர்வு செய்யலாம். மரக்கம்புகள் ஊன்றி நிழல் வலை அமைக்க, ஒரு சதுர மீட்டருக்கு 410 ரூபாய் செலவாகும். இதில் 50 சதவீதம் மானியமாக, 210 ரூபாய் தோட்டக்கலைத்துறை வழங்கும். மூங்கில் கம்புகள் ஊன்றி நிழல்வலை அமைக்க, ஒரு சதுர மீட்டருக்கு 300 ரூபாய் செலவாகும். இதில் பாதி, 150 ரூபாய் மானியம் வழங்கப்படும். அதிக பட்சமாக ஒரு விவசாயிக்கு, ஆயிரம் சதுர மீட்டருக்கு நிழல்வலை அமைக்க மானிய உதவிகள் வழங்கப்படும். விருப்பமுள்ள விவசாயிகள் அனைவரும் விண்ணப்பிக்கலாம். தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் கூறுகையில்,"" தற்போது இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பகுதியிலும் 20 விவசாயிகள் ஒருங்கிணைத்து, ஒரே இடத்தில் தொகுப்பாக நிழல்வலை அமைத்து, நாற்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதனால், விவசாயிகளுக்கு தரமான நாற்று கிடைக்கும். உற்பத்தி செலவும் குறையும். ஒரே மாதிரி காய்கறிகள், சாகுபடி செய்வதன் மூலம் விற்பனை வாய்ப்பும், பராமரிப்பு தொழில்நுட்ப உதவிகளும், அரசின் மானிய உதவிகளும் எளிதில் கிடைக்கும்," என்றார்.

**கோமுகி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

கச்சிராயபாளையம்:கோமுகி அணையிலிருந்து பாசனத்திற்கு அமைச்சர் மோகன் தண்ணீர் திறந்து வைத்தார். கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணையிலிருந்து ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும். இந்த ஆண்டு பருவ மழை போதிய அளவு இல்லாததால் அணை நிரம்புவதற்கு தாமதம் ஏற்பட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையில் அணையின் கொள்ளளவான 46 அடியில் (560 மில்லியன் கன அடி) 42 அடிக்கு(413 மில்லியன் கன அடி) தண்ணீர் நிரம்பியது. இதனையொட்டி நேற்று அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அமைச்சர் மோகன் பங்கேற்று தண்ணீரை திறந்து வைத்தார். அழகுவேல்பாபு எம்.எல்.ஏ., பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் சண்முகம், ஒன்றிய சேர்மன்கள் ராஜசேகர், ராஜேந்திரன், அரசு, பேரூராட்சி தலைவர் வெங்கடேசன் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சின்னராஜ், உதவித் செயற்பொறியாளர் சிவக்குமார், இளம்பொறியாளர் சம்பத், உதவிப் பொறியாளர்கள் நாராயணன், பிரபு, இளம்பொறியாளர் கணேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

வரும் 22ம் தேதி வரை பழைய பாசன ஆற்றில் வினாடிக்கு 60 கன அடியும், புதிய பாசன வாய்க்காலில் 50 கன அடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. அடுத்த 45 நாட்களுக்கு பழைய பாசனத்திற்கு 120 கன அடியும், புதிய பாசனத்திற்கு 100 கன அடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலம் 40 கிராமங்களில் உள்ள 10 ஆயிரத்து 860 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

**சூப்பர் விவசாயிகள் கவுரவிக்க அரசு முடிவு**

திண்டுக்கல்: புதிய தொழில்நுட்பங்களை கடைபிடித்து, மகசூலை அதிகரிக்கும், விவசாயிகள் கவுரவிக்கப்பட உள்ளனர்.விவசாயிகளின் தேவைகளை அறிந்து செயல்படுத்துவதற்காக, அட்மா என்ற திட்டம், 2007ல், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கான நிதியில், 90 சதவீதத்தை மத்திய அரசும், 10 சதவீதத்தை மாநில அரசும் வழங்குகின்றன.விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வது, புதிய தொழில்நுட்பங்கள் பற்றி அவர்களுக்கு தெரிவிப்பது, பயிற்சி அளிப்பது, செயல்விளக்கம் மூலம், சாகுபடி வழிமுறைகளை கற்பிப்பது போன்றவை திட்டத்தின் முக்கிய நோக்கம்.அத்துடன், தொழில்நுட்பங்களை பயன் படுத்தி, மகசூலை அதிகரிக்கும் விவசாயிகளை, சிறந்த விவசாயிகளாக கவுரவிக்கவும், அட்மா

திட்டத்தின் கீழ் செயல்படும், அதிகாரிகள் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.-

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயிர் இன்சூரன்ஸ் தொகை செலுத்த 15ம்தேதி கடைசி வேளாண் அதிகாரி தகவல்

முத்துப்பேட்டை, : பயிர் இன்சூரன்ஸ் தொகையை வருகிற 15ம்தேதிக்குள் செலுத்த வேண்டும் என முத்துப்பேட்டை வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் வாணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறிருப்பதாவது: திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டாரத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின்கீழ் 2013-14ம் ஆண்டு சம்பா தாளடி பயிர்களுக்கு செலுத்த வேண்டிய காப்பீடு (இன்சூரன்ஸ்) தொகையை வருகிற 15ம்தேதிக்குள் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### பொன்னமராவதியில் வேளாண் பொறியியல் அலுவலகம் விவசாயிகள் வலியுறுத்தல்

பொன்னமராவதி, : புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் வேளாண் பொறியியல் துறை அலுவலகம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொன்னமராவதி பகுதி விவசாயிகள் வேளாண் பொறியியல் துறையில், அரசு மானியத்தில் வேளாண் உபகரணங்கள் மற்றும் பண்ணைக்குட்டை போன்றவைகள் அமைப் பது உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக அறந்தாங்கிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் இப்பகுதி

விவசாயிகள் நீண்ட தூரம் சென்று பயன் பெற முடியவில்லை. இது குறித்து முன்னோடி விவ சாயி பழனிச்சாமி கூறுகை யில், வேளாண் பொறியியல் துறை மூலமாக பைப்கள், உழவு இயந்திரங்கள், பண்ணைக்குட்டை அமைத்தல் என அரசு மானியத்தில் ஆன விவசாயிகளுக்கான திட்டம் ஏராளமாக உள்ளது. இதுபற்றி பொன்னமராவதி பகுதி விவசாயிகளாகிய எங்களைப் போன்றவர்களுக்கு தெரிவதில்லை. மேலும் புதுக்கோட்டையில் இருந் தால் கூட பரவாயில்லை. 70 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள அறந்தாங்கியில் அந்த அலுவலகம் இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் நீண்ட தூரம் சென்று பயன்பெற முடியவில்லை.
எனவே பொன்னமராவதி பகுதி விவசாயிகளின் நலன் கருதி இங்கு வேளாண் பொறியியல் துறை அலுவலகம் அமைக்க வேண்டும் என்றார். மேலும் கடந்த ஆட்சியில் வட்டார வேளாண் விரிவாக்க மையத்துடன் தோட்டக்கலைத்துறை, பொறியியல் துறை போன்ற துறை அலுவலங்கள் இணைக்கப்பட்டது. ஆனால் தோட்டக்கலைத்துறை மட்டுமே பொன்னமராவதியில் செயல்படுகிறது. வேளாண் பொறியியல்துறை அலுவலகம் இல்லை. எனவே பொன்னமராவதி பகுதிக்கு தேவையான அலுவலர்களுடன் கூடிய வேளாண் பொறியியல் துறை அலுவலகம் அமைக்க அரசு முன் வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மல்லிகை விலை 'மளமளவென' உயர்வு**

கம்பம், : விளைச்சல் குறைவால் கம்பம் பூ மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது.
கம்பம் பழைய பஸ் ஸ்டாண்டில் பூ மொத்த விற்பனை கடைகள் உள்ளன. இங்கு ஆண்டிபட்டி, உசிலம்பட்டி, நிலக்கோட்டை, பல்லவராயன்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்து செவ்வந்தி, சம்பங்கி, கோழிக்கொண்டை, வாடாமல்லி, மல்லிகை, ரோஜா, மரிக்கொழுந்து உள்ளிட்ட வகை பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இவைகள் கூடலூர், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, புதுப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள சில்லரை வியாபாரிகளுக்கு தினமும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களாக ஏற்பட்டு வரும் பனிப்பொழிவின் காரணமாக விளைச்சல் குறைந்துள்ளதால் பூக்களின்

விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.
கடந்த 20 தினங்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.30க்கு விற்பனை செய்யப்பட்ட செவ்வந்தி ரூ.120, ரூ.40க்கு விற்ற ரோஜா ரூ.100, ரூ.20க்கு விற்ற துளசி கிலோ ரூ.50, ரூ.20க்கு விற்ற கோழிக்கொண்டை ரூ.60, ரூ.200 - 300 வரை விற்ற மல்லிகை கிலோ ரூ.1200 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**தேனி வாழைப்பழம் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி**

தேனி, :  தேனி மாவட்டத்தில் விளையும் வாழை பெருமளவில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக வேளாண்மை உற்பத்தி மற்றும் தோட்டக்கலைத் துறை ஆணையர்கள் தெரிவித்தனர்.
தமிழ்நாடு வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப்சக்சேனா மற்றும் தோட்டக்கலைத்துறை ஆணையர் சத்தியபிராசாகு நேற்று முன்தினம் தேனி மாவட்டத்திற்கு வந்தார். அப்போது கலெக்டர் பழனிசாமி மற்றும் வேளாண்துறை இணை இயக்குநர் சுந்தரம், மாவட்ட வாழை உற்பத்தியாளர் சங்கத்தலைவர் கருப்பையா, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் முருகன் மற்றும் விவசாயிகளுடன் தேனி அருகே உள்ள வடபுதுப்பட்டி, ஊஞ்சாம்பட்டி, மதுராபுரி உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்றார். அங்கு பயிரிடப்பட்டிருந்த வாழை சாகுபடியை நேரில் பார்வையிட்டார்.
ஆய்வு குறித்து கூறுகையில், ‘தமிழகத்தில் வாழை சாகுபடியில் தேனி மாவட்டம் 7வது இடத்தில் உள்ளது. இம்மாவட்டத்தில் திசு வாழை 6 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது. வரும் காலத்தில் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் வாழை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திசு வாழை சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம் அளிக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் வாழைக்காயை பழுக்கவைக்க அரசு சார்பில் ஒன்றும், தனியார் நிறுவனங்கள் சார்பில் எட்டு நிலையங்கள் செயல்படுகின்றன. தேனி மாவட்டத்தில் விளையும் வாழைகள் தமிழகம் மட்டும் அல்லாமல் வெளிமாநிலங்களுக்கும், மத்திய கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் 3 ஆயிரம் மெட்ரிக் டன் வாழைப்பழம் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது’ என்றார்.

**அறுவடை நெற்பயிர் கருகும் அபாயம்**

உடுமலை,; உடுமலை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் மூலம் 3700க்கும் மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வழக்கமாக இப்பகுதியில் 2 போகம் நெல் சாகுபடி நடக்கும். அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் கடந்த 2 ஆண்டுகளாக நெல் சாகுபடி நடைபெற வில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த தென்மேற்கு பருவமழையால் அணையில் நீர் நிரம்பியதையடுத்து இப்பகுதியில் 1200 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை 800 ஏக்கரில் அறுவடை முடிந்து விட்டது, மீதி 400 ஏக்கரில் நெல் விளையும் பருவத்தில் உள்ளது.

இந்நிலையில் தற்போது அணையின் நீர்மட்டம் 32 அடியாக குறைந்து விட்ட து. ஆற்றிலும், பிரதாக கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் சரிந்தது. இதனால் கல்லாபுரம், ராமகுளம் வாய்க் காலுக்கு தண்ணீர் வருவது தடைபட்டுள்ளது. அறுவடைக்கு இன்னும் சிறிது நாட்களே உள்ள நிலையில் 400 ஏக்கர் நெற்ப யிரை காக்க கல்லாபும், ராமகுளம் வாய்க்காலுக்கு தண்ணீரை திருப்பி விட வேண்டுமென அதிகாரிகளை விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இதற்கிடையில் பிரதான கால்வாயில் நேற்று முன்தினம் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டது.

தற்போது அணையின் நீர்மட்டம் 32 அடி, வரவு 323 கனஅடி, வெளியேற்றம்- ஆற்றில் 400 கனஅடி.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஊட்டியில் 25 கிலோ பொன்னி அரிசி ரூ.1,300-க்கு விற்பனை



ஊட்டியில் 25 கிலோ பொன்னி அரிசி ரூ.1,300-க்கு விற்பனையாகிறது. பலசரக்கு பொருட்களில் ஏலக்காய் கிலோ ரூ.800-க்கும், குறு மிளகு ரூ.700-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.அரிசி ரகங்கள்நீலகிரி மாவட்டத்தில் கூட லூர், பந்தலூர் தாலுகாவில் மட்டும் நெற்பயிர்கள் விளைகிறது. மற்ற இடங்களில் விளைவது கிடையாது.

### மேடி புயல் தீவிரம் அடைந்து வடக்கு திசையில் நகருகிறது கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு




சென்னை

மேடி புயல் தீவிரம் அடைந்து வடக்கு நோக்கி நகர்ந்து மியான்மர் நோக்கி செல்கிறது. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உண்டு.

<u>தீவிரம் அடைந்த மேடி புயல்</u>

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரம் அடைந்து தாழ்வுப்பகுதியாகி, மண்டலமாகி, தீவிர மண்டலமாகி புயலானது. அதற்கு மேடி என்று பெயர் சூட்டப்பட்டது. அந்த புயல் தற்போது தீவிரம் அடைந்து சென்னைக்கு கிழக்கில் தென்கிழக்கில் 490 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

<u>வடக்கு நோக்கி நகரும்</u>

வங்கக்கடலில் உருவான மேடி புயல் தீவிரம் அடைந்து காணப்படுகிறது. அது வடக்கு நோக்கி நகரும். பெரும்பாலும் அது மியான்மர் நோக்கி நகர்கிறது. இருப்பினும் எங்கு செல்லும் என்று துல்லியமாக இப்போது கணிக்க முடியவில்லை.

தமிழ்நாட்டை பொறுத்தவரை இந்த புயலுக்கு சம்பந்தம் இல்லை. என்றாலும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். உள்மாவட்டங்களில் வறண்ட வானிலை தான் நிலவும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8–30மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் எண்ணூரில் 3 செ.மீ.மழையும், வடசென்னையில் 2 செ.மீ.மழையும், போலீஸ் டி.ஜி.பி. அலுவலகம், மகாபலிபுரம், அண்ணாபல்கலைக்கழகம், செங்குன்றம் ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ.மழையும் பெய்துள்ளது.

<u>சென்னையில் கடும் குளிர்</u>

சென்னையிலும், சென்னை புறநகர்களிலும் கடந்த 2 நாட்களாக பகல் முழுவதும் வானம் மேக மூட்டமாக காணப்படுகிறது. சூரியனை கண்ணால் பார்க்கவே முடியவில்லை.பகலிலேயே குளிர்ந்த காற்று வீசுகிறது. இரவில் கடும் குளிர் வாட்டுகிறது. மார்கழி மாதம்தான் பிறந்துவிட்டதோ என்று எண்ணும் அளவுக்கு குளிர் அதிகமாக உள்ளது.

**மேட்டூர் அணை நீர்த்தேக்கப்பகுதியில் உழவுப்பணிகள் மீண்டும் தொடங்கியது முழுவடை விவசாயம் மும்முரம்**



கொளத்தூர்,

மேட்டூர் அணை நீர்மட்டம் 84 அடியாக குறைந்தது. இதனால் அணையின் நீர்த்தேக்கப்பகுதியில் முழுவடை விவசாயத்துக்கான உழவுப்பணிகள் மீண்டும் தொடங்கின.

**முழுவடை விவசாயம்**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறையும் போதெல்லாம் அணையின் நீர்த்தேக்கப்பகுதிகளான மூலக்காடு, செட்டிப்பட்டி, பண்ணவாடி, கோட்டையூர் ஆகிய பகுதிகளில் முழுவடை விவசாயம் நடைபெறுவது வழக்கம்.

கடந்த ஆண்டு மேட்டூர் அணையின் நீர்மட்டம் சுமார் 17 அடி வரை சரிந்ததால் நீர்த்தேக்கப்பகுதிகளில் முழுவடை விவசாயம் முப்போகம் நடந்தது. எள், நிலக்கடலை போன்ற தானிய பயிர்களும், பருத்தி போன்ற பணப்பயிர்களும் விளைவித்து முழுவடை விவசாயிகள் பயனடைந்தனர்.

மேலும், பெரும்பாலான முழுவடை விவசாயிகள் நீர்த்தேக்கப் பகுதிகளிலேயே குடிசைகள் அமைத்து முகாமிட்டு விவசாய பணிகளில் மும்முரமாக ஈடுபட்டனர்.

**மீண்டும் தொடங்கியது**

இதற்கிடையே, நடப்பாண்டு மேட்டூர் அணை நிரம்பியதால் கடந்த சில மாதங்களாக நீர்த்தேக்கப் பகுதிகளில் முழுவடை விவசாயம் எதையும் செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 84 அடியாக குறைந்தது. இதனால் அந்த நீர்த்தேக்கப்பகுதிகளில் முழுவடை விவசாயம் மீண்டும் தொடங்கியது. இதற்காக உழவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு எள், மிளகாய் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

<u>மும்முரம் அடையும்</u>

நீர்த்தேக்கப்பகுதிகளில் ஆங்காங்கே டீசல் என்ஜின்கள் நிறுவப்பட்டு பாசனத்திற்காக தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. பருவமழை கை கொடுக்காததால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. இதனால் நடப்பாண்டிலும் முழுவடை விவசாயம் மும்முரம் அடையும் என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

**மின்உற்பத்தி குறைந்ததால் ஓய்வெடுக்கும் காற்றாலைகள்**



உடுமலை

உடுமலை பகுதிகளில் காற்றின் வேகம் குறைந்ததால் காற்றாலைகள் மின்உற்பத்தி முடங்கியது.

<u>**காற்றாலைகள்**</u>

உடுமலை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் தென்மேற்கு பருவ காற்றுகளை அடிப்படையாக கொண்டு காற்றாலைகள் நிறுவப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மே கடைசி வாரம் முதல் அக்டோபர் மாதம் வரை காற்றாலை மின்உற்பத்தி அதிகமாகவும் மற்ற மாதங்களில் காற்றாலை மின்உற்பத்தி குறைந்தும் காணப்படும்.

உடுமலை பகுதிகளில் மட்டும் 2,900 மெகா வாட் திறனுடைய 4 ஆயிரத்து 850 காற்றாலைகள் இயங்கி வருகிறது. இங்கு 225 கிலோ வாட் முதல் 2,100 கிலோ வாட் திறனுடைய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. காற்றின் வேகம் வினாடிக்கு 3 மீட்டர் வேகத்தில் இருந்தால் காற்றாலைகள் இயங்க தொடங்கும்.

வினாடிக்கு 12 மீட்டர் வேகத்தில் காற்று வீசினால் காற்றாலைகள் முழு திறனுடன் இயங்கும்.

<u>மின்உற்பத்தி குறைவு</u>

உடுமலை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உற்பத்தியாகும் மின்சாரம் துணை மின் நிலையங்கள் மூலம் மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. காற்றாலைகளில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் பயன்படுத்தும் வகையில் தற்போது தேனியில் இருந்து அனிக்கடவு வரையும், அனிக்கடவு முதல் ராசிபாளையம் வரையும், ராசிபாளையம் முதல் சேலம் வரையிலும் புதியதாக உயர் அழுத்த மின்பாதைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

உடுமலை பகுதிகளில் மட்டும் கடந்த ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சாராசரியாக 850 மில்லியன் யூனிட் மின்சாரமும், செப்டம்பர் முதல் அக்டோபர் மாதங்களில் 500 மில்லியன் யூனிட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் கடந்த நவம்பர் மாதம் 20 மில்லியன் யூனிட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வறண்ட வானிலை காரணமாக விவசாய பணிகள், வீட்டு உபயோகம், தொழிற்சாலைகளுக்கு மின் தேவை அதிகரித்துள்ள உள்ள நிலையில் உடுமலை பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி குறைந்து காணப்படுகிறது. இதனால் காற்றாலைகள் மின்உற்பத்தி இல்லாமல் ஓய்வெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**திருவாரூர் மாவட்டத்தில் பெய்த தொடர்மழை பயிர்களுக்கு நல்ல பலனை தந்தது விவசாயிகள் மகிழ்ச்சி**



திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழை பயிர்களுக்கு நல்ல பலனை தந்ததாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>அதிகபனி</u>

ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரை வடகிழக்கு பருவமழை பெய்யும். ஆனால் இந்த ஆண்டு வடகிழக்குப்பருவ மழை அக்டோபர், நவம்பர் மாதங்களில் குறைவான அளவில் பெய்தது. மழை பெய்ய வேண்டிய நேரத்தில் அதிக பனி பெய்ததால் பருவமழையை நம்பி இருந்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

ஏற்கனவே மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் போதிய அளவு கடைமடை பகுதியை வந்து சேராததால் சம்பா பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்தனர்.

<u>தொடர்மழை</u>

இந்தநிலையில் வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 1–ந் தேதி முதல் 5–ந் தேதி வரை தொடர்ந்து 5 நாட்கள் மழை பெய்தது. இதனால் திருவாரூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து மன்னார்குடியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:–

திருவாரூர் மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த இந்த மழை பலத்த மழையாக இல்லாவிட்டாலும் மிதமான சாரல் மழையாக இருந்தது. தொடர் மழை காரணமாக காரணமாக திருவாரூர் மாவட்டப்பகுதிகளில் உள்ள ஆறுகள், குளங்கள், பாசன வாய்க்கால்களில் தண்ணீர் இருப்பு அதிகரித்தது.

தற்போது பெய்த தொடர் மழை பயிர்கள் செழித்து வளர்வதற்கு ஏற்றதாகும். மன்னார்குடி, நீடாமங்கலம் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு இந்த மழை நல்ல பலனை தந்தது. பாமணியாறு உள்ளிட்ட பாசன ஆறுகளில் மழை காரணமாக தற்போது தண்ணீர் திறந்து விடவில்லை. இருந்தாலும் ஆறுகளில் வெள்ள ஓட்டம் அதிகமாக உள்ளது மகிழ்ச்சியாக இருக்கிறது என கூறினர்.

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா பயிர் சாகுபடி பணிகள் முடிவடைந்து அறுவடையை எதிர்நோக்கி உள்ள இந்த நேரத்தில் பெய்த மழையினால் சம்பா, தாளடி பயிர்களுக்கு நல்ல பலனை தரும் என்றும் விவசாயிகள் கூறினர்.

**சிவாடி பகுதியில் சோளப்பயிர்களுக்குள் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகள் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்பு**



சோளப்பயிர்

நல்லம்பள்ளி

சிவாடி பகுதியில் சோளப்பயிர்களுக்குள் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகளால் அவற்றை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் நல்லம் பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட சிவாடி ஊராட்சிக்குள் உட் பட்ட பகுதிகளில் சோளப்பயிர் அதிக அளவில் விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ளனர். இந்த சோளப்பயிர் சுமார் 10 முதல் 13 அடி உயரத்திற்கு வளர்ந்துள் ளது. இந்த பகுதிகளில் சோளப் பயிர்களுக்குள் செல்லும் மின் கம்பிகள் தாழ்வாக தொங்கி கொண்டு இருக்கிறது. இதனால் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்குள் செல் வதற்கு அச்சப்படுகிறார்கள்.

இன்னும் சில வாரங்களில் நீண்டு வளர்ந்துள்ள சோளம் அறுவடைக்கு வரும் நிலையில் மின்கம்பிகள் சோளக்கதிரை யும், சோளத்தட்டுக்களையும் தொட்டு செல்லும் நிலை உள்ளதால் அறுவடை காலங் களில் மின்சாரம் தாக்கும் என்ற அச்சத்தில் சோளக்கதிர் கள், தட்டைகளை அறுவடை செய்யாமல் உள்ளனர். மேலும் பல இடங்களில் மின்கம்பிகள் மரங்களை தொட்டும், மின் கம்பங்கள் சாய்ந்த நிலையிலும் உள்ளது. இதனால் அந்த பகுதிகளில் எப்போது என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் பொதுமக்கள், விவசாயிகள் உள்ளனர்.

விவசாயிகள் கோரிக்கை

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், இந்தாண்டு நல்ல மழை பெய்துள்ளதால் மானா வாரி பயிரான சோளம் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டுள் ளது. இந்த சோளப்பயிர் சுமார் 10 அடி உயரத்திற்கு மேல் வளர்ந்துள்ளது. இந்த பகுதிகளில் செல்லும் மின் கம்பிகள் மிகவும் தாழ்வாக தொங்குவதால் சோளக்காட் டிற்குள்

செல்ல முடியவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குள் சோளப்பயிர்களை அறுவடை செய்யாவிட்டால் கதிர்கள் அனைத்தும் உதிர்ந்து கீழே விழுந்து விடும். இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும்.

எனவே பொதுமக்கள் மற் றும் விவசாயிகளின் நலன் கருதி தாழ்வாக தொங்கும் மின் கம்பிகளை உயரத்தில் எடுத்து செல்வதற்கு நட வடிக்கை மேற்கொள்ள வேண் டும். மரக்கிளைகளில் உரசியப் படி செல்லும் இடங்களில் மரக்கிளைகளை வெட்டி அகற்ற வேண்டும் என்று தெரிவித்தனர். உயிர் சேதம் மற்றும் விவசாய பொருட்களில் இழப்பீட்டை தடுக்க தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை உயர்த்தி கட்டவும், மின் மரங் களை வெட்டவும் மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள், விவசாயி கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

**தஞ்சை மாவட்டத்தில் இலக்கை எட்டாத சம்பா நெல் சாகுபடி தாளடி நிர்ணயிக்கப்பட்டதைவிட 500 எக்டேரில் கூடுதல் நடவு**



நெற்களஞ்சியம்

தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி இலக்கை எட்டவில்லை. தாளடி நெல் சாகுபடி நிர்ணயிக்கப்பட்டதை விட 500 எக்டேரில் கூடுதலாக நடைபெற்றுள்ளது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். பாசனத்திற்காக மேட்டூர் அணை வழக்கமாக ஜூன் மாதம் 12–ந்தேதி திறந்து விடப்படும். குறுவை நெல் சாகுபடி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்து பரப்பளவு அதிகரிக்கும்.

ஆனால் இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் ஜூன் 12–ந்தேதி திறக்கப்படாமல் தாமதமாக திறக்கப்பட்டது. வழக்கமாக 40 ஆயிரம் எக்டேருக்கு அதிகமாக சாகுபடி நடைபெறும். ஆனால் இந்த ஆண்டு

குறிப்பிட்ட நாளில் திறக்காததால் 28 ஆயிரத்து 294 எக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டது. இதில் எக்டேருக்கு சராசரியாக 7 ஆயிரத்து 151 கிலோ மகசூல் கிடைத்தது.

சம்பா, தாளடி சாகுபடி

குறுவை சாகுபடி பரப்பளவு குறைந்ததால் சம்பா, தாளடி சாகுபடி அதிக அளவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டதது. இதனால் தஞ்சை மாவட்டத்தில் சம்பா 1 லட்சத்து 18 ஆயிரத்து 140 எக்டேர், தாளடி 25 ஆயிரம் எக்டேர் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு தேவையான விதை நெல், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வினியோகம் செய்யப்பட்டன.

தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணி இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. இதுவரை 1 லட்சத்து 5 ஆயிரத்து 530 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தாளடி சாகுபடி 25 ஆயிரத்து 500 எக்டேரில் நடந்து முடிந்துள்ளது. தாளடி நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 25 ஆயிரம் எக்டேரை விட கூடுதலாக 500 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

இலக்கை எட்டவில்லை

ஆனால் சம்பா சாகுபடி இலக்கை எட்டவில்லை. கடைமடை பகுதியான பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளில் தான் தற்போது சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கும் இன்னும் 3 ஆயிரம் எக்டேர் மட்டுமே சாகுபடி பணிகள் நடைபெற உள்ளது. எனவே இந்த ஆண்டு திட்டமிட்ட 1 லட்சத்து 18 ஆயிரத்து 140 எக்டேர் இலக்கு என்பது சாத்தியம் இல்லை என்றே கூறப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு தாலுகாவில் சம்பா சாகுபடி அதிக அளவில் நடைபெற்றுள்ளது.

இது குறித்து தஞ்சை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகரிடம் கேட்ட போது அவர் கூறுகையில், ‘‘தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி பரப்பளவு குறைந்ததால் குறுவை சாகுபடி செய்யாத விவசாயிகள் சம்பா சாகுபடியில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இதனால் 1 லட்சத்து 18

ஆயிரத்து 140 எக்டேர் சம்பா சாகுபடி செய்ய திட்டமிட்டு இருந்தோம். ஆனால் எதிர்பார்த்த அளவு குறுவை சாகுபடி செய்யாத விவசாயிகள் சம்பா சாகுபடியில் ஈடுபடவில்லை. இன்னும் 3 ஆயிரம் எக்டேர் அளவிற்கு சாகுபடி நடைபெறும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் தாளடி சாகுபடி நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக அளவு நடைபெற்றுள்ளது. மேலும் தஞ்சை மாவட்டத்தின் தேவைக்காக யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் அனைத்தும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது''என்றார்.

**சூளகிரி அருகே விவசாய பயிர்களை நாசம் செய்த யானை கூட்டம்**



சூளகிரி அருகே விவசாய பயிர்களை யானை கூட்டம் நாசம் செய்து சென்றன. ஒரு வாரத்திற்கு பிறகு மீண்டும் யானைகள் வந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>யானைகள் அட்டகாசம்</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே உள்ளது போடூர்பள்ளம் காடு. கடந்த மாதம் 45 யானைகள் இங்கு வந்தன. அவை 25 நாட்களாக அங்கேயே முகாமிட்டு விவசாய பயிர்களை நாசம் செய்தன. இதில் பல லட்சம் மதிப்பிலான விவசாய பயிர்கள் நாசம் ஆனது.

இந்த யானைகள் கூட்டத்தை வனத்துறையினர் போராடி தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்கு விரட்டினார்கள். இதனால் கடந்த ஒரு வாரமாக விவசாயிகள் நிம்மதியுடன் இருந்தார்கள்.

<u>விவசாய பயிர்கள் நாசம்</u>

இந்த நிலையில் சூளகிரி அருகே போடூர் பள்ளம் காட்டிற்கு 13 யானைகள் நேற்று முன்தினம் வந்தன. தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் இருந்து ஊடேதுர்க்கம்,

சினிகிரிப்பள்ளி வழியாக போடூர்பள்ளம் வந்த அந்த யானைகள் நேற்று முன்தினம் இரவு அருகில் உள்ள பாத்தகோட்டா கிராமத்திற்குள் புகுந்தன.

அங்குள்ள விவசாயி சுகுமார் என்பவரின் பீன்ஸ் தோட்டத்திற்குள் புகுந்து பீன்ஸ் பயிர்களை தின்றும், கால்களால் மிதித்தும் நாசம் செய்தன. இதே போல தஸ்தகீர் என்பவரின் ராகி தோட்டத்திற்குள் புகுந்து அங்கிருந்த பயிர்களை தின்றன.

இதே போல சுற்று வட்டாரத்தில் இருந்த காய்கறிகள், நெல், ராகி உள்ளிட்ட பயிர்களையும் யானைகள் கூட்டம் நாசம் செய்து சென்றன. யானைகள் மீண்டும் வந்துள்ளதால் சூளகிரி சுற்று வட்டார விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தேயிலை தோட்டத்தில் உலா வரும் சிறுத்தை புலி கூண்டு வைத்து பிடிக்க கோரிக்கை**



மஞ்சூர்,

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே உள்ள தாய்சோலையில் அடர்ந்த வனப்பகுதியும், தேயிலை தோட்டங்களும் உள்ளன.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக ஒரு சிறுத்தைப்புலி தனது குட்டியுடன் தேயிலை தோட்டத்தில் சுற்றி வருகிறது. இதை பலர் பார்த்து உள்ளனர். அவர்களை கண்டதும் அது தப்பி ஓடிவிடுகிறது.

இதனால் தேயிலை தோட்டம் அருகே உள்ள குடியிருப்புகளில் வசித்து வரும் தொழிலாளர்கள் அச்சம் அடைந்து உள்ளனர். மேலும் தேயிலை பறிக்கும் தொழிலாளர்களும் வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே முடங்கி கிடக்கிறார்கள்.

எனவே தேயிலை தோட்டத்தை சுற்றி வரும் சிறுத்தைப்புலியை வனத்துறை அதிகாரிகள் கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**நடுவீரப்பட்டு பகுதியில் பன்னீர் கரும்பு விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி**


பன்னீர் கரும்பு

பண்ருட்டி,

நடுவீரப்பட்டு பகுதியில் பன்னீர் கரும்புகள் அமோகமாக விளைந்துள்ளதால் விசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நடுவீரப்பட்டு அருகே பத்திரக்கோட்டை, ஆராய்ச்சிகுப்பம்,பட்டிக்குப்பம் உள்பட கிராமங்களில் விவசாயிகள் ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை யொட்டி அறுவடை செய்யும் வகையில் பன்னீர் கரும்புகளை பயிர் செய்து வருகின்றனர். அதன்படி கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் அதிக அளவில் கரும்புகள் பயிர் செய்துள்ளனர். தற்போது அவை நன்கு விளைந்து வருவதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது. பொங்கல் பண்டிகையை யொட்டி அறுவடை செய்வதற்கு ஏதுவாக நாங்கள் பன்னீர்கரும்புகளை சித்திரை மாதத்தில் பயிர் செய்தோம். மழையின்மையால் கரும்புகள் பயிர் செய்த நேரத்தில் தண்ணீர் தட்டுபாடு ஏற்பட்டதால் மிகுந்த சிரமபட்டு அதனை பராமரித்து வந்தோம்.கூடுதல் செலவு

நாங்கள் எதிர்பார்த்தது போல் கரும்புகள் நன்கு வளர்ந்து வருகின்றன. எனினும் கடந்த 10 நாட்களுக்கு முன்பு பலத்த காற்றுடன் பெய்த மழையால் சில கரும்புகள் கீழே சாய்ந்து விழுந்து பாதிப்படைந்துள்ளன. இதனால் எங்களுக்கு சிறிது வருமானம் இழப்பு ஏற்படும். மேலும் கடந்த ஆண்டு ஒரு ஜோடி பன்னீர்கரும்புகள் ரூ. 20 முதல் ரூ.25 வரையில் விற்பனையானது. ஆனால் நடப்பாண்டில் கரும்புகள் பயிர் செய்து விளைவித்ததில் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதால் கடந்த ஆண்டைவிட கூடுதலான விலைக்கு கரும்புகள் விற்றால்தான் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என கூறினார்.

2.நடுவீரப்பட்டு அருகே பத்திரக்கோட்டையில் பன்னீர் கரும்புகள் நன்கு விளைந்து வருவதை படத்தில் காணலாம்.

## விவசாய பாசனத்திற்காக கோமுகி அணையில் வினாடிக்கு 110 கன அடி நீர் திறப்பு



கோமுகி அணையில் இருந்து தண்ணீர் வெளியேறி புதிய பாசன வாய்க்கால் வழியாக செல்வதை படத்தில் காணலாம்.

கச்சிராயப்பாளையம், -

விவசாய பாசனத்திற்காக கோமுகி அணையில் இருந்து வினாடிக்கு 110 கன அடி நீர் திறக்கப்பட்டது.

### <u>கோமுகி அணை</u>

விழுப்புரம் மாவட்டம் கல்வராயன்மலை அடி வாரத்தில் கோமுகி அணை உள்ளது. 46 அடி உயரம் கொண்ட இந்த அணை ஆண்டுதோறும் வடகிழக்கு பருவ மழையின்போது நிரம்பி நவம்பர் அல்லது டிசம்பர் மாதம் சம்பா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் அணை யின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்தது. ஹெலன் புயலின் போது பெய்த மழையில் அணையின் நீர்மட்டம் 40 அடியாக உயர்ந்தது.இதன்பின்னர் லெகர் புயல் ஏமாற்றியதால் அணையின் நீர்மட்டம் உயரவில்லை. இந்நிலையில் வங்க கடலில் உருவாகியிருந்த காற்றழுத்த தாழ்வு நிலையில் கல்வராயன் மலையில் பெய்த மழையினால் கோமுகி அணைக்கு வினா டிக்கு 80 கன அடி தண்ணீர் வந்தது. இதனால் அணையில் நீர் மட்டம் 43 அடியாக உயர்ந்தது.

### <u>அமைச்சர் திறந்து வைத்தார்</u>

இதனால் அணையை திறக்க வேண்டும் என முதல்- அமைச்சர் ஜெய லலிதாவுக்கு விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.அதன்பேரில் இன்று காலை 7 மணிக்கு கோமுகி அணை திறக்கும் நிகழ்ச்சி நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழக ஊரக தொழில்துறை அமைச்சர் மோகன் கலந்து கொண்டு பழைய பாசனத்திற்கு 50 கன அடி தண்ணீரும், புதிய பாசனத்திற்கு வினாடிக்கு 60 கன அடி தண்ணீரும் திறந்து வைத்தார். இதன்படி புதிய பாசனத்திற்கு உட்பட்ட மாத்தூர் பன்மலை, செல்லம்பட்டு, தாவடிப்பட்டு,

கரடி சித்தூர், பால்ராம் பட்டு உள்பட பல்வேறு கிராம விவசாய நிலங்கள் பழைய பாசனத்திற்கு உட்பட்ட வடக்கனந்தல், மாதவச்சேரி, சோமன் டார்குடி, ஏர்வாய்ப் பட்டினம் என பல்வேறு கிராம விவசாய நிலங்கள் என இந்த கோமுகி அணையின் தண்ணீர் திறப்பில் 11 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

இந்நிகழ்ச்சியில் கள்ளக் குறிச்சி சட்டமன்ற உறுப் பினர் அழகுவேல்பாபு, கோட்டாட்சியர் குணசேகர், ஒன்றியக் குழு தலைவர் ராஜேந் திரன், பேரூராட்சி தலைவர் வெங்கடேசன், விவசாய சங்க தலைவர்கள், காமராஜ், ராமச்சந்திரன், வட்டாட்சியர் பார்த்தசாரதி, கண்காணிப்பு பொறியாளர் சண்முகம், பொறியாளர் சின்னராஜி மற்றும் பொதுப் பணித்துறை அலுவலர்கள், விவசாய சங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

**அரியலூர் மாவட்டத்தில் 999 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள்**



**விலையில்லா வெள்ளாடுகள்**

அரியலூர், -

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 6 ஒன்றியங்களை சேர்ந்த 14 கிராமங்களை சேர்ந்த 999 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட உள்ளன.

பரம ஏழைகளாகவுள்ள நிலமற்ற விவசாய கூலிகளுக்கு விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் 6 ஒன்றியங்களை சேர்ந்த 14 கிராமங்களை சேர்ந்த 999 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளது.

<u>ஜனவரி மாதம்</u>

அதன்படி வருகிற ஜனவரி மாதம் ஆண்டிமடம் ஒன்றியம் குவாகம் கிராமத்தை சேர்ந்த 75 பயனாளிகளுக்கும், ஓலையூர் கிராமத்தை சேர்ந்த 54 பேர்களுக்கும், செந்துறை ஒன்றியம் மணப்பத்தூர் கிராமத்தில் 95 பேர்களுக்கும், பாளையக்குடி கிராமத்தில் 50 பேர்களுக்கும், பரணம் கிராமத்தில் 57 பேர்களுக்கும் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

இதே போல் அரியலூர் ஒன்றியம் ஒட்டக்கோவில் கிராமத்தை சேர்ந்த 77 பேர்களுக்கும், ஜெயங்கொண்டம் ஒன்றியம் முத்துசேர்வாமடம் கிராமத்தில் 90 பேர்களுக்கும், திருமானூர் ஒன்றியத்தை சேர்ந்த கோவில்எசனை கிராமத்தில் 73 பேர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

<u>பிப்ரவரி மாதம்</u>

வருகிற பிப்ரவரி மாதம் ஆண்டிமடம் ஒன்றியம் மருதூர் கிராமத்தில் 110 பேர் களுக்கும், பெரிய கிருஷ்ணா புரம் கிராமத்தில் 100 பேர்க ளுக்கும், ஜெயங் கொண்டம் ஒன்றியம் படநிலை கிராமத் தில் 69 பேர்களுக்கும், தா.பழூர் ஒன்றியம் கீழநத்தம் கிராமத்தில் 54 பேர்களுக்கும், கோடங் குடி கிராமத்தில் 27 பேர்களுக்கும், செந்துறை ஒன்றியம் நமங்குணம் கிராமத்தில் 58 பேர்களுக்கும் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

<u>சிறப்பு கிராமசபை கூட்டம்</u>

இது குறித்து வருகிற 10-ந் தேதி அந்தந்த ஊராட் சியில் ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையில் சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடைபெற உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற விரும்புவோர் பாஸ்போர்ட் அளவுப் புகைப்படத்துடன் விண்ணப்பத்தினை குடும்ப அட்டை, நிலமில்லாச் சான்று, அரசுத் திட்டத்தில் இதுவரை எந்த சலுகையும் பெறவில்லை என்ற சான்று. ஆகிய ஆவண நகலுடன் ஊராட்சி மன்றத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

தேர்வு செய்த பயனாளிகள் பட்டியலை 17-ந் தேதி அன்று இறுதி செய்யப்படும். இறுதி செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலை 19-ந் தேதி அன்று நடைபெறும் கிராமசபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப் படவுள்ளது.

மேற்கண்டவாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**வங்கக்கடலில் உருவான மேடி புயல்: கடலூர் துறைமுகத்தில் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது**



கடலூர் முதுநகர்,

வங்கக்கடலில் உருவான மேடி புயல் காரணமாக கடலூர் துறைமுகத்தில் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

.

இது தொடர்பாக கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது ;-

பருவமழை

தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. இதையடுத்து கடலோர மாவட்டங்களில் பரவலாக நல்ல பெய்து வருகிறது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியது. அது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியதை தொடர்ந்து, தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. மேலும், வலுவடைந்து புயல்சின்னமாக மாறவும் வாய்ப்பு உள்ளது என வானிலை மையம் நேற்று அறிவித்திருந்தது.

மாடி புயல்

தற்போது, இந்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு தென்கிழக்கே 500 கிலோ மீட்டர் தொலைவில் புயலாக மாறி வங்கக்கடலில் மையம் கொண்டுள்ளது. இந்த

புயலுக்கு மாடி என பெயரிடப்பட்டுள்ளது. இந்த மேடி புயலானது வடக்கு, வடக்கிழக்கு திசையில் நகர்ந்து வரும் 48 மணி நேரத்தில் கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், கடலூர் மாவட்டத்தில் அநேக இடங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உண்டு என வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

புயல் கூண்டு

அதன்படி, நேற்று கடலூரில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மேலும், தேவனாம்பட்டினம் மற்றும் துறைமுகப்பகுதிகளில் கடல் சீற்றம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில், கடலூர் துறைமுகத்தில் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மேலும், கடல் சீற்றம் அதிகமாக இருப்பதால் 3–வது நாளாக மீனவர்கள் நேற்றும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.